
# Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு 13 தொகுதி 2 ஏப்ரல் - ஜூன் 2024


**R 5534**

## உமது நியாயங்கள் மகா ஆழமாக இருக்கிறது

## THY JUDGEMENTS ARE A MIGHTY DEEP

**“தேவனுடைய பைத்தியம் எனப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது, தேவனுடைய பெலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது” – 2கொரிந்தியர் 1:25.**

பாவத்தையும் பாவிகளையும் கையாளுவதற்காக தேவன் மேற்கொண்டிருக்கின்ற திட்டமானது, உலகப்பிரகாரமான சிந்தைக்கும் உலகப்பிரகாரமான ஞானத்திற்கும் மிக முட்டாள்தனமான, மிகவும் ஞானமற்ற ஒரு திட்டமாக தோன்றுகிறது. இந்த நிலையின் மீதான வேதாகம அறிவிப்புகள் அப்படிப்பட்ட சிந்தைகளுக்கு நியாயமானதாக ஈர்க்கப்படவில்லை. எல்லாவற்றிற்கும் முதலாவதாக, தேவன் மனிதனை பரிபூரணமாக சிருஷ்டித்தார். அதன்பிறகு ஆதாம் சோதிக்கப்பட்டு பாவத்தில் விழுகிற நிலைமைகளின்கீழ் அவனை வைத்தார். அதன்பின்னர் தேவன், கீழ்ப்படியாமையின் விளைவாக இருக்கும்படி தாம் முன்னெச்சரித்திருந்த மரணதண்டனையை அவனுக்கு தீர்ப்பாக அறிவித்தார். இவ்வாறு மனிதனுக்கு தண்டனையளித்தபிறகு, யேகோவா தேவன் தாமே, மாபெரும் விலையில், பாவிகளுக்கான மீட்பரை ஏற்பாடு செய்ததன் மூலமாக அந்த மரண தண்டனையிலிருந்து ஒரு விடுதலையை வழங்கினார். சாபத்திலிருந்து அவர்களின் இரட்சிப்புக்கான அவரது ஏற்பாட்டை உலகத்திற்கு பறைசாற்ற அவர் விரும்பியபோது, அந்த பாவ சந்ததியிலிருந்து நற்காரியங்களை சொல்வதற்கு பிரசங்கிமார்களைத் தேர்ந்தெடுத்து அவர் அனுப்பினார்.

ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களாக இந்த பிரசங்கிமார்கள் தங்கள் சிறந்த முயற்சிகளை பயன்படுத்தி –யிருக்கின்றனர். அவர்களில் சிலர் மரித்தபோது, மற்றவர்கள் அவர்களின் இடத்தை எடுத்துக்கொண்டனர். ஆனால் பிரசங்கிக்கப்பட்ட எல்லா பிரசங்கங்களிலும் வெகுசிலர் மாத்திரமே அந்த செய்தியை நம்பினார்கள். அல்லது கவனமாய் செவிகொடுத்தார்கள். இந்த அபூரண செய்தியாளர்கள் அடிக்கடி களைப்புற்று தளர்ந்துபோனார்கள். அவர்கள் கனத்த பாரம்சுமக்கிற இருதயங்களுடன் கர்த்தரிடத்திற்கு சென்று, தங்கள் உழைப்புகளுக்கு கிடைத்த அற்பமான பலன்களை அவரிடம் கூறுகிறார்கள். ஆனால் கர்த்தரோ, “நான் உங்களுக்குக் கொடுத்த வார்த்தைகளை தொடர்ந்து வழங்குங்கள் இது என் சித்தமாயிருக்கிறது ; இதுவே நீங்கள் செய்யவேண்டுமென்று நான் விரும்பியது” என்று பதிலளித்தார். எனவே அவர்கள் மிகக் கடுமையாக உழைத்து, முடிவை தேவனிடத்தில் விட்டுவிடுகின்றனர்.

ஆனால் இந்த உலகம் அவிசுவாசமுள்ளவர்களின் தலையை (சிந்தையை) அசைக்கிறது. அவர்களுக்கு அப்படிப்பட்ட செய்தியைப் பறைசாற்றுதல், விலைமதிப்புள்ள நேரத்தை முட்டாள்தனமாக வீணடிக்கிறதாக, தெளிவற்ற புத்தியின் ஒரு சான்றாகக் காணப்படுகிறது. அன்பின் தேவன் ஒருவர் இருக்கிறார் என்றாலும், அது தேவனுடையதாயிருககிறது என்று சிலர் நம்புகிறார்கள். ஆயினும் அப்போஸ்தலர் நமக்குக் கூறுவதுபோல் ; இது “பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று” – 1கொரிந் 1:21. அவரது மாபெரும் திட்டத்தோடு தொடர்புடைய, ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக ஒரு விசேஷ வகுப்பாரை தேர்ந்தெடுப்பதற்கு, மனிதர்களால் முட்டாள்தனமென்று அடையாளப்படுத்துகிற இந்த முறையை தேவன் தெரிந்தெடுத்தார். மனித நிலைப்பாட்டிலுருந்து இது மிகச்சிறியதும் , பலவீனமானதுமான தொடக்கமாகத் தோன்றினாலும், தேவனுடைய கிரியை, அதாவது உலகை இரட்சித்து தூக்கிவிடுவதற்கு அவர் நோக்கங் கொண்டிருந்த வேலை, கிட்டத்தட்ட தோல்வியடைந்ததுபோல

### இம்மாத வெளியீட்டில்


.. உமது நியாயங்கள் மகா ஆழமாய்... ... 1

.. இரண்டு பஸ்கா நினைவுகூருதல்கள் ... 5

.. உபத்திரவத்தில் சந்தோஷமாயிருத்தல் ... 9



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

தோன்றினாலும், தேவனுடைய திட்டம் அதன் மகிமைநிறைந்த நிறைவேற்றத்திற்குக் கொண்டுவரப்படும்போது, இது அனைவராலும் மிக ஞானமானதாக, வல்லமை நிறைந்ததாக, பயனுள்ளதாக பார்க்கப்படும். இது அவிசுவாசிகளின் கேலியாக புறஜாதிகளின் இகழ்ச்சியாக இனியும் இருக்கப்போவதில்லை.

தற்போது தேவன் உலகின் புகழ்பெற்றவர்களை தேர்ந்தெடுக்காமல், மாறாக, ''மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டாதபடிக்கு'' கீழானவற்றை, தாழ்மையான, முக்கியத்துவமற்றவர்களையே முதன்மையாக தேர்ந்தெடுக்கிறார். மீந்திருக்கிற உலகை ஆசீர்வதிக்கும் கருவிகளாக, இவர்களைஅவர் தேர்ந்தெடுக்கிறார்.

**இப்போதும் ஜீவன் ஒரு மாபெரும் அருட்கொடை**

மிகப்பரந்த அளவில், பாவம் துன்பம் மரணம் சம்பந்தப்பட்ட அதன் வெளிப்பாட்டிற்கு முன்பாக, ஆழ்ந்த திட்டமிடப்பட்ட ஏற்பாட்டின் தரநிலையில் , தேவ அன்பு எப்படி காணப்படுகிறது என்ற கேள்வி கேட்கப்படுகிறது ? அந்தக் கேள்வியைக்குறித்து நாம் சிந்திக்கும்போது, ஒருவர் முதலில், பாவம் துன்பம் மற்றும் மரித்தல் ஆகியவை நித்திய கால துயரத்தின் முன்னோட்டமாக இருக்கிறது என்ற தப்பறையான கருத்திலிருந்து தன்னை முழுவதுமாக விடுவித்துக்கொள்ளவேண்டும். அதன்பின், தேவன் எந்தவகையிலும் நம் கடனாளி அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் உயிர்வாழ்வதற்குக்கூட நாம் அவருக்கு கடனாளிகளாக இருக்கிறோம். அவர் இந்த இனத்திற்கு எதுவும் கடன்பட்டிருக்கவில்லை.

நித்திய சித்திரவதை அல்லது மரணத்திற்கு பின்பு துன்பம் அனுபவிக்கிற உத்தரிக்கும் ஸ்தலம் பற்றிய கருத்தை, எல்லார் மனங்களிலிருந்து அகற்ற நம்மால் முடியும் என்று வைத்துக்கொள்வோம், பின்னர் அவர்களிடம், இப்போது: நீங்கள் சில வருடங்களோ அதற்கு அதிகமாகவோ வாழ வேண்டும் என்று விரும்புகிறீர்களா அல்லது ஒரே தடவையாக மரிக்க விரும்புகிறீர்களா என்பதை சிந்தியுங்கள் என்று சொல்லவேண்டும், அல்லது, ஒருவேளை நாம் இந்த வழியை வைக்க நினைப்போம்: அதாவது, நீங்கள்உயிர்வாழ்கிற நிலையைப் பெற்றிருப்பதில் மகிழ்ச்சியடைகிறீர்களா ? அல்லது நீங்கள் ஒருபோதும் பிறக்கவில்லை என்பதில் மகிழ்வீர்களா ? என்பதை அவர்கள் முன் வைக்க நினைப்போம். பெரும்பான்மையானவர்கள், தாங்கள் உயிர்வாழ விரும்புவதாகவே பதிலளிப்பர், அவர்கள் எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலம் வாழ்வதையேதெரிவுசெய்வர் என்று நாம் நம்புகிறோம். அவர்கள் இன்றோ அல்லது நாளையோ அல்லது அடுத்த வருடமோ மரிப்பதற்கு விரும்ப மாட்டார்கள். அவர்களுக்கு உதவ முடிந்தால் ஒருபோதும் மரிக்க விரும்பமாட்டார்கள்.

மரிப்பதில் மகிழ்ச்சியடைவோம் என்பதை உணர்கிறவர்கள் அல்லது ஒருபோதும் பிறக்கவேண்டாம் என்று விரும்புகிறவர்கள், சாதாரணமான தீமை மற்றும் மகிழ்ச்சியற்ற அனுபவங்களைக் காட்டிலும், அதிகமானதை அடைகிறவர்களாக இருக்கிறார்கள். இல்லையென்றால், அவர்கள் தெளிவற்ற அல்லது சமநிலையற்ற மனதில் இருக்கிறார்கள். அநேகர் தாங்கள் விரும்புகிறதைப்போல, அதிகப்படியான பணத்தை பெற்றிருப்பதில்லை, சிலர் பெற்றிருக்கிறதைப் போலவும், தாங்கள் பெற விரும்புகிறதைப்–போலவும், மிக அமைதியான அல்லது இனிமையான சுற்றுப்புற சூழ்நிலைகளையும் நிலைமைகளையும் பெற்றிருக்கவில்லை. இருப்பினும் வாழ்க்கை இனிமையாக இருக்கிறது. மேலும் அவர்கள் முடிந்தவரை விடாப்பிடியுடன் அதைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஜீவன் மீதான அன்பு மனிதனிடத்தில் இயல்பாகவே இருக்கிறது, மேலும் வீழ்ச்சியின் விளைவால் வரும் வருத்தமான அனுபவங்களிலும்கூட தப்பிப் பிழைத்திருக்கிறது.

**தேவன் ஏன் பாவத்தின் இந்த தற்கால ஆளுகையை அனுமதித்தார் ?**

ஆனால் தேவன் ஏன் காரியங்கள் இப்படி இருக்கவேண்டும் என்று அனுமதிக்கிறார் ? இது ஒரு உச்சஉயர்வான ஜீவனுள்ள சிருஷ்டிகரின் மீது நம்பிக்கை வைப்பதற்கு போதுமான விசுவாசத்தை இன்னும் வைத்திருக்கிறவர்களின் மனங்களுக்கு எப்போதும் குழப்பமூட்டுகிற பிரச்சனைகளில் ஒன்றாக இது இருந்து வருகிறது. வேதாகம விளக்கவுரைகளில், தொகுதி I இல், ''தீமை ஏன் அனுமதிக்கப்பட்டது'' என்ற அத்தியாயத்தில் நாம் கூறியிருப்பதைவிட இந்த விஷயத்தை தெளிவாக்கவோ அல்லது தெளிவாகக் கூறவோ நாம் அறியவில்லை. தேவனுடைய இடத்தில் நம்மை வைத்து, மனிதனை அவர், ஒழுக்கரீதியான வினைத்திறன்கள் இல்லாமல் கீழ்நிலையான மிருகங்களைப் போன்றோ அல்லது சரி மற்றும் தவற்றின் தரநிலைகளை மதித்துணரக்கூடிய, தன் சிருஷ்டிகரை மதித்துணர்ந்து பார்க்கக்கூடிய, மனம் மற்றும் ஒழுக்க ரீதியான வினைத்திறன்களுடனும், நன்மை மற்றும் தீமைக்கிடையே, அதாவது, அந்த சிருஷ்டிகளுக்கு கீழ்ப்படிவது மற்றும் கீழ்ப்படியாமல் இருப்பதற்கும் இடையே பகுத்தறிந்து பார்த்து தேர்ந்தெடுக்கிற வல்லமையுடனும் மனிதனை அவர் சிருஷ்டித்திருக்க வேண்டும் என்பதை காணக்கூடியவர்களாக இருக்கிறோம்.

மிருக படைப்பை ஜீவிக்கும்படி முன்பே கொண்டுவந்த தேவன், பூமிக்குரிய ஜீவிக்கின்ற தளத்தின்மீது, தம்முடைய சொந்த சாயலிலும் ரூபத்தின்படியேயும், ஒரு உயர்ந்த உன்னத இன ஜீவிகளை சிருஷ்டிக்க விரும்பினார். தூதர்களைப்போல பரிபூரணர்களாக, அதே ஒழுக்க தரநிலைகளையும், அதே நீதியின் கொள்கைகளை மதித்துணர்ந்து போற்றுகிறதற்கு இயலுகிறவர்களாக இருந்த ஒரு ஜீவிக்கிற இனத்தைப் பெறுவதற்கு நோக்கம் கொண்டிருந்தார். பாவத்தில் விழும் ஆபத்தில் சிலசமயம் அவர்கள் இருக்காதபடி இந்த ஜீவிகளை அப்படி உருவாக்க தேவனால் எப்படி முடியும் ? என்று கேள்வி

இங்கு கேட்கக்கூடும். அவர்களை இப்படி சிருஷ்டிப்பது தேவனுடைய நோக்கமாக இல்லை என்பது தெளிவாகத்தெரிகிறது. அவர்கள் சுதந்திரமான ஒழுக்க முகமையின்பண்பை அடைந்திருக்கவேண்டும், அதாவது, நீதிக்காகவோ அல்லது அநீதிக்காகவோ தங்கள் சொந்த விருப்பங்களை அல்லது சித்தங்களை பயிற்சி செய்வதற்கான வல்லமையைப் பெற்றிருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார்.

மனிதனை சிருஷ்டிக்கும் சமயத்தில், விடிவெள்ளியின் மகனாகிய லூசிபர், தன்னைப் படைத்தவருக்கு, உண்மையில்லாதவனாய், பேராசையுள்ள உள்நோக்கங்களை போற்றி வளர்க்க ஆரம்பித்தான். தன்னைவிட கீழான ஜீவிக்கிற நிலைமட்டத்தில் இருக்கிற ஒரு இனத்தை, அவர்களுடைய சிருஷ்டிகராகிய தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்துக்கு மாறாக ஒரு போக்கை தேர்ந்தெடுப்பதற்கு தூண்டக்கூடும் என்பதை அவன் உணர்ந்தான். மனிதனை சிருஷ்டிப்பதற்கு முன்பே, லூசிபர் கீழ்ப்படிதலின் பாதையிலிருந்து விலகுவார், அவருடைய நீதியான அரசாங்கத்திற்கு எதிராக ஒரு கிளர்ச்சியாளராக , ஒரு மாபெரும் எதிரியாக மாறுவார் என்று முன்பே தேவன் அறிந்திருந்தார். மேலும் அதன் விளைவாக, அவருடைய பேரரசில் பின்னாளில் தீமை ஊடுருவும் என்பதையும் முன்பே அறிந்திருந்தார். கலகக்கார லூசிபரின் (அதுமுதற்கொண்டு சாத்தானாக மாறிய – அதாவது எதிராளியாக, குற்றஞ்சாட்டுபவராக, வெறுப்பவராக மாறிய) ஆதிக்கத்தின் மூலம் மனிதன் கீழ்ப்படியாதவனாக மாறி, அவன் சிருஷ்டிக்கப்பட்ட பரிபூரண நிலையிலிருந்து விழுவான் என்று தேவன் முன்னறிந்திருந்தார்.

இதை அறிந்து, மனிதனுக்கு அநீதி இழைக்காமல், மாறாக சோதனைத்தூண்டுதலை எதிர்ப்பதற்கான முழு திறமையுடன் அவனை சிருஷ்டித்து, தகப்பனாகிய ஆதாம் மற்றும் தாய் ஏவாளின் அனுபவமின்மையை சாதகமாக எடுத்துக்கொண்டு, முழு மனுக்குலத்தையும் கைப்பற்றுவதற்குத் தேடிய சாத்தானால் தாக்கப்படும் ஒரு பொருளாக அவன் இருப்பான் என்று மனிதனை சிருஷ்டிக்க ஏற்பாடு செய்து, நேரத்தைக் குறிப்பிட்டார். மற்றொரு வார்த்தைகளில் கூறுவோமானால், இந்த சோதனை மனிதனுக்கு வர அனுமதிக்க தேவன் நோக்கங்கொண்டிருந்தார். அந்த சோதனையில் ஆதாம் தவறுவார், இவ்வாறு மரணதண்டனையை வருவித்துக்கொள்வார் என்பதை அறிந்து, இந்த இனத்தின் அனுபவத்தை தம்முடைய அறிவுக்கூர்மையுள்ள சிருஷ்டிகள் யாவருக்கும் ஒரு முக்கிய பாடமாக இருக்கும்படி தேவன் வடிவமைத்திருந்தார். அதேசமயம், மனித குடும்பம், பாவத்துடனான கசப்பான தங்கள் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்ளும் பாடங்களினால் அனுகூலமடைந்தால், நீதியினுடனான இசைவுக்குள் திரும்ப வருவதாயிருந்தால், இறுதியில் அவர்கள் வீழ்ச்சியின் தீயவிளைவுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, பெருமளவில் ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும்படி இந்த விஷயத்தை இப்படியாக மேற்கொள்வதற்கு தேவன் நோக்கமாயிருந்தார்.

**காலம் ஒரு முக்கியமான சிறப்பம்சம்**

தேவனுடைய தெய்வீகப் பிரமாணத்துடன் முழு இசைவில் இருப்பதற்கு தங்களை நிரூபிக்காதவர்கள் எவரையும் நித்திய ஜீவனுக்கு தகுதியுடையவர்களாக அவருடைய முடிவில்லா ஞானம் அங்கீகரிக்காது. பாவத்தின் தன்மையானது, தன்னைத்தானே பரப்புவதும், துயரத்தையும் சீரழிவையும் விளைவிக்கியதாகவும் இருக்கிறது. இந்த அறிவைக்கொண்டு தேவன் முன்னதாகவே மனிதன் தன் சொந்த வழியை அடையும்படி ஏற்பாடு செய்திருந்தார். தேர்ந்தெடுத்தலிலும், சித்தத்திலும் சுயாதீனத்துடன் இருக்கும் அறிவுசார் ஜீவிகள், கற்பிக்கப்படாமலும் கட்டுப்படுத்தப்படாமலும் இருந்தால், கீழ்ப்படியாமையுடன் தண்டனை இணைக்கப்பட்டுள்ளது என்று இருந்தாலும்கூட இறுதியில் பாவத்தில் விழும் என்று அவர் முன்னறிந்திருந்தார். அவர் லூசிபரை கட்டுப்படுத்த வேண்டாம் என்று தெரிவுசெய்தார்.

தேவனுடைய திட்டமானது, ஆயிரம் வருடங்கள் அல்லது 6000 வருடங்கள் என்கிற சில வருடங்களின் நிலைப்பாட்டிலிருந்து கண்ணோக்கவும் நிதானிக்கவும் முடியாதபடி இருக்க அது மிகவும் விசாலமானதாக இருக்கிறது. இது நித்திய காலத்தின் நிலைப்பாட்டிலிருந்து கண்ணோக்கப்படவேண்டும். இது சில வருடங்களோ அல்லது சில நூற்றாண்டுகளோ ஜீவிக்கிற சிருஷ்டிகளின் நல்ஜீவியத்திற்காக அல்ல, மாறாக, முடிவில்லா யுகங்கள் முழுவதும் ஜீவிக்கிறவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. எனவே அவருடைய திட்டம், அவரது மகிமைக்காகவும் அவர்களுடைய சொந்த நித்திய நன்மைக்காகவும், எல்லாக் காலங்களையும், அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா ஜீவிகளையும் உள்ளடக்குவதற்காக மிகவும் பரந்துவிரிந்த நிலையில் அமைக்கப்படவேண்டும்.

மனுக்குலம் துயரப்பட்டு மரிக்கிறார்கள் என்ற காரணத்தால் யேகோவா தேவன் வேதனையில் புலம்புகிறார் என்று நாம் கருதக்கூடாது. அவர் முடிவில்லா அன்பு மற்றும் அனுதாபத்தின் தேவனாயிருக்கிறார். ஆனால் மனிதன் விழுவான் என்றும், மனிதர்கள் மற்றும் தூதர்கள் என்கிற அவருடைய சிருஷ்டிக்கப்பட்ட அறிவுஜீவிகள் அனைவருக்கும் அறிவுறுத்தி, இறுதியில் ஆசீர்வாதத்தினை அளிப்பதற்கான முழு காரியத்தையும் தம்மால் மேற்கொள்ள முடியும் என்பதை ஆரம்பத்திலிருந்தே தேவன் அறிந்திருந்தார். அப்படி செய்வதற்கும் அவர் நோக்கங்கொண்டிருந்தார். பாவமும் மரணமும் அதன் எல்லா பயமுறுத்துகிற விளைவுகளுடன் ஆறாயிரம் ஆண்டுகளாக இந்த உலகத்தில் மேலோங்கியிருப்பதை நாமே அறிவோம். இறுதியில் எல்லாவற்றையும் நன்மையானதை செய்வதற்கு ஏற்படுத்தப்படும்படி, நம் தேவன் கட்டுப்படுத்தும் இடத்தில் இருக்கிறார் என்பதையும்கூட நாம் அறிந்திருக்கிறோம். ஜலப்பிரளயத்தில் அநேக உயிரிழப்புகள் ஏற்பட்டதன்

காரணத்தால், ஒரு பயங்கரமான நிலைகுலைவு என்று நாம் நினைத்தோம், எனினும் மற்றவர்களுக்காக துக்கங்கொண்டாட ஒரு பாதி ஜனங்களை விட்டுவிட்டிருந்தால், அந்த பேரிடர் அல்லது பேராபத்து மிகப்பெரியதாக இருந்திருக்கும். இந்த வகையில் வரும் மரணம் ஒப்பீட்டளவில் சுலபமானது, ஏனெனில் மனிதர்கள் தண்ணீரில் மூழ்கும்போது அதிகமாக துன்பப்படுவதில்லை என்று கருதப்படுகிறது.

மனுக்குலம் பாடுபடுவதற்கு ஆறாயிரம் வருடங்களின் பாவம், துன்பம் மற்றும் மரணம் ஒரு நீண்ட காலமாக காணப்படுகிறது. எனினும் இந்த இனத்தின் பெரும்பான்மையானோர் இருபது வயதைத் தாண்டி ஜீவித்திருக்கவில்லை. ஒருவேளை ஐந்து வயதுவரைகூட ஜீவித்திராதவர்கள் ஒரு பாதிப்பேராயிருக்கும். வெகுசிலரே நூறு வயதை எட்டினர். இந்த தற்கால நிலைமைகளின் கீழும்கூட தேவன் மிகுந்த கிருபையுள்ளவராக இருக்கிறபடியால், நாம் அனைவரும் ஒப்பீட்டளவிலான ஆறுதல், ஆசீர்வாதம் மற்றும் மகிழ்ச்சியின் காலங்களைப் பெற்றிருக்கிறோம். மகிமை நிறைந்த எதிர்கால ஆசீர்வாதத்தின் அற்புதமான வாய்ப்புக்களுடன், மனிதனுக்கான நித்தியஜீவனின் நம்பிக்கையுடன், தேவனுடைய அறிவுசார்ந்த சிருஷ்டிகள் எல்லாவற்றினால் நித்தியத்திற்கும் கற்றுக்கொள்ளப்பட்ட அதன் மாபெரும் பாடங்களுடன் , பாவம் மற்றும் மரணத்தின் ஆட்சி, ஒட்டுமொத்தமாக வேறுவிதமான, மாறுபட்ட ஒரு தோற்றத்தை முன்வைக்கிறது.

தங்கள் மாபெரும் சிருஷ்டிகருக்கு கீழ்ப்படியாததன் தவிர்க்கமுடியாத விளைவுகள் என்ன என்பதை ஏற்றகாலத்தில் எல்லோரும் தெளிவாக உணர்ந்துகொள்வதற்கு, பாவத்தின் நீண்டகால ஆளுகையையும் அதன் தொடர்ச்சியாக வந்த தீமைகளையும் அனுமதித்து, தேவன் தமது அரசாங்கத்தின் கொள்கைகளை வெளிப்படுத்திக் காண்பித்துவருகிறார். தங்களுக்கு எதிராக கொடுக்கப்பட்ட மரணதண்டனையை தேவன் உடனடியாக நிறைவேற்றவில்லை என்பதில் ஆதாமும் ஏவாளும் மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்பதில் நாம் உறுதியாயிருக்கிறோம். அவர்கள் ஏதேன் தோட்டத்தைவிட்டு வெளியே துரத்தப்பட்டபிறகும், அநேக வருடங்களுக்கு அவர்கள் தங்கள் ஜீவனில் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள் என்பதில் நாம் உறுதியாயிருக்கிறோம். கண்ணீர், வலி மற்றும் துன்பங்கள் அவர்களை சாய்த்தபோதிலும், அவர்கள் அதிகமாகவோ குறைவாகவோ மகிழ்ச்சியின் அநேக அனுபவங்களைப் பெற்றார்கள் என்று நாம் நம்புகிறோம்.

எனவே ஆதாமின் சந்ததியின் முழு வரலாற்றையும் நாம் கண்ணோக்கும்போது, மேலும் பாவம் துன்பம் மற்றும் மரணத்துடனான எல்லா அனுபவங்களும் உலகத்திற்கான தேவனுடைய மகிமை நிறைந்த நோக்கங்களை நிறைவேற்றவேண்டும் என்பதையும், அவைகள் தற்போது ஜீவிக்கிற அல்லது எப்போதும் ஜீவிக்கப்போகிற அவருடைய அறிவார்ந்த சிருஷ்டிகள் எல்லாருக்கும் ஒரு நிலையான பாடத்தை நிரூபிக்க வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் உணர்ந்துகொள்ளும்போது, மனிதனுக்கு நீண்டகாலமாக காணப்பட்ட தீமையின் ஆளுகையை தேவன் ஏன் அனுமதித்திருந்தார் என்பதை நாம் காணமுடியும். தேவன் இப்போது மிகவும் தாழ்மையுள்ள மற்றும் கீழ்ப்படிதலுள்ள மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வகுப்பாரை தேர்ந்தெடுத்து, கிருபை நிறைந்த ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்கிற மனுக்குல சந்ததி அனைவரையும் பரிபூரணத்திற்கும், நித்திய ஜீவனுக்கும் மீட்டுரிமை பெறுவதற்கும், தூக்கிவிடுவதற்கும், தம்முடைய ஒரே பேரான குமாரனின்கீழ் முகவர்களாக பயன்படுத்த இருப்பதை பார்க்கும்போது, இந்த வகுப்பாரை மிகவும் அபூரணமான கருவிகளினால், ''பைத்தியமாய்த் தோன்றுகிற பிரசங்கத்தின்'' மூலம் அழைப்பதற்கு அவர் ஏன் பிரியமாயிருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும். இவ்வாறு அவர் பயன்படுத்த விரும்புகிற வழிவகைகளின் மூலமாக அவருடைய செய்தியை பெற்றுக்கொள்கிறவர்களை, பாவத்தை விட்டுவிட்டு தேவனுக்கு ஊழியம் செய்ய மகிழ்ச்சியாயிருக்கிற தாழ்மையுள்ளவர்களை அவர் வெளிப்படுத்துகிறார்.

**ஒரு மீட்பரும், மகாபெரிய ஒருவரும்**

மனுக்குலத்திலிருந்து என் சாபத்தை எடுத்து, ஜீவனுக்கான மற்றொரு சோதனையை... அதாவது, ஒரு தனிப்பட்ட சோதனையை அவர்கள் பெறும்படி செய்வேன் என்று தேவன் சொல்லியிருக்கலாம். ஆனால் இது தேவனுடைய நீதியுடன் இசைவில் இருந்திருந்தாலும், இது மாத்திரம் போதுமானதாக இருந்திருக்காது. மனுக்குலம் நீண்ட நாட்களாக பாவசேற்றில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. ஒரு மீட்பர், ஒரு இரட்சகரின்றி, அவர்களுக்கு வழங்கப்படுகிற எந்தவொரு புதிய சோதனையிலிருந்தும் அனுகூலமடைய அவர்கள் வல்லமையற்றவர்களாய் இருந்தனர். அந்த இரட்சகர் பலமுள்ளவராக இருந்து, அவர் அவர்களுக்கான தண்டனைத் தொகையை செலுத்துவதினால் மரண தண்டனையை நீக்குகிறவராக மட்டுமல்லாமல், மாறாக, அவர்களது சந்ததியிலுள்ள அங்கங்களின் பாவம் மற்றும் மரணத்தின் எல்லா கட்டுக்களிலிருந்தும் விடுவிக்கிறவராகவும் இருந்தார். நீண்ட நாட்களாக அடிமைத்தனத்திலும் குருட்டுத்தன்மையிலும் பற்றிப்பிடித்திருக்கிற மாபெரும் எதிராளியை கட்டுவதற்கு வல்லமையுள்ள ஒரு இரட்சகராக அவர் இருக்கவேண்டும். அவர் அவர்களுடைய காயங்களை குணமாக்கி, அவர்களுடைய குருடான கண்களையும் செவிடான காதுகளையும் திறந்து, அவர்களை மேலே தூக்கி, இன்னும்மேலே, வெளிச்சத்திற்கும் தேவபுத்திரர்களின் சுயாதீனத்திற்கும் தூக்கிவிடுகிறவராக இருக்கவேண்டும். உண்மையாகவே மனிதனுக்கு ஒரு வல்லமையுள்ள மீட்பர் தேவைப்படுகிறார். மேலும் அவருக்குப் பிரியமான குமாரனுக்குள் வழங்கப்பட்டதற்காக, தேவனுக்கு ஸ்தோத்திரம்.

யுகங்களைப் பற்றிய அற்புதமான திட்டத்தின் பல்வேறு படிகளை கண்டுபிடிக்கும்போது, எந்த ஜீவிக்கிற மட்டத்திலும், நித்திய ஜீவன் அடையவேண்டிய அனைவருக்கும், தாழ்மையின் பாதையே மகிமையின் பாதையாயிருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்கிறோம். ''தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்''(லூக் 14:11). தேவனுடைய வல்லமையுள்ள கரத்தின் கீழ் மகிழ்ச்சியோடு தங்களைத் தாழ்த்தாத எவருக்கும், சோதனையின்கீழ் முழுமையாக நிரூபிக்காமலும், தகுதியுடையோராக காணப்படாமலும் இருக்கிற எவருக்கும் நித்திய ஜீவனின் மதிப்பிடமுடியாத ஆசீர்வாதம் வழங்கப்பட மாட்டாது. இந்தக் கொள்கை மனித மற்றும் ஆவிக்குரிய ஜீவிகள் இருவருக்கும் பொருந்துகிறது. தேவனிடத்திலும், அவருடைய நீதியான பிரமாணங்களிடத்திலும் உள்ள அன்பினால், மகிழ்ச்சியோடு அவருக்கு கீழ்ப்படிகிறவர்கள் மாத்திரமே ஆயிரமாண்டு யுகத்தின் அறுவடைக்காலத்தையும் தாண்டி ஜீவிக்க அனுமதிக்கப்படுவர். மற்ற அனைவரும் முற்றிலும் அழிக்கப்படுவர்.

**தேவனுடைய மகிமை நிறைந்த குணம் வெளிப்படுத்தப்பட்டது**

பின்னர் வாழ்க்கையின் ஒவ்வொரு செயல் எல்லையிலுமுள்ள தேவனுடைய வல்லமையுள்ள பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள பரிசுத்தமானது,, கனம் மகிமை மற்றும் துதி அனைத்தும் சர்வவல்ல சிருஷ்டிகருக்கும், அவருடைய மகிமை நிறைந்த குமாரனுக்கும் யுகா யுகங்கள் முழுவதிலும் இருக்கும் என்பதை குறிப்பிட்டுக் காட்டும். யேகோவாவின் மீட்பின் திட்டம் எவ்வளவு அற்புதமானது, விழுந்துபோன மனிதனின் ஆற்றல் ஆழ்ந்தறிவதற்கு அப்பால் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று அனைவரும் பார்த்து, ஏற்றுக்கொள்வார்கள். தெய்வீக குணலட்சணத்தின்... அதாவது, முடிவில்லா இரக்கத்துடன் கூடிய அவருடைய நெறிதவறாத நீதி, அவருடைய மகிமை நிறைந்த ஞானம், அவருடைய அற்புதமான அன்பு, அவருடைய வலிமைமிகு வல்லமை... ஆகியவற்றின் மகத்துவமும், மகிமையும் நிலைத்துநின்று வெளிப்படும். அப்போது அனைவரும் அவர்முன் வணங்கி நின்று, அவரை வழிபடுவார்கள்.

ஓ, என் தேவனே உம்முடைய இரக்கங்களை

புத்துயிரடைந்த என் ஆத்துமா மதிப்பாய்வு செய்கிறது;

அந்த கண்ணோட்டத்துடன் பயணிக்கும்போது,

நான் ஆச்சரியத்தில் தொலைந்துவிட்டேன், இனி அன்பில் துதியில் என் பிரயாணம்!

--------

**R 5541**

## இரண்டு பஸ்கா நினைவுகூருதல்கள்
## TWO PASSOVER MEMORIALS

**ஆதார வசனங்கள் : மாற்கு 14:12–25**

**''ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்''– 1 கொரிந்தியர் 11:26.**

இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் சுவாரசியமான அம்சங்களில் ஒன்றாக இந்தப் பாடத்தின் பொருளானது உள்ளது. அப்போஸ்தலர்களுடனான தம் கடைசி இராப்போஜனமாக இது இருக்கப்போவதை அப்போஸ்தலர்கள் அறியாதிருந்ததை, இயேசு அறிந்திருந்தார். தம்முடைய மரணம் சமீபித்திருப்பதை அவர் குறிப்பிட்டிருந்தபோதிலும், அவர் குறிப்பிட்டிருந்த விபரீதமானது மிகவும் சமீபமாய் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள இயலாதவர்களாய் அவரது சீஷர்கள் காணப்பட்டனர். ஆனால் இயேசுவோ தாம் குறிப்பிட்டவைகளின் அர்த்தத்தை முழுமையாக உணர்ந்தவராய், தம்முடைய வேலையின் நிறைவுக்காக ஆவலோடு இருந்தார். அந்த நாளின் முடிவில், அவரும் அவரது சீஷர்களும் பஸ்காவைப் புசிக்கச் சென்றபோது, இயேசு ; ''நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்'' என்றார். அது அடுத்தநாள் நிறைவேறின மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானமேயாகும்.

பஸ்காவை ஆயத்தம் பண்ணும்படிக்கு இரண்டு சீஷர்களாகிய பேதுருவும் யோவானும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். இயேசு இவ்வார்த்தைகளைக் கூறி அனுப்பினபோது அவர் பெத்தானியாவில், லாசருவின் வீட்டில் இருந்தார் என்பது நிச்சயமே. இயேசுவும் அவரது சீஷர்களும் பஸ்காவைப் புசித்த அதே பெரிய மேல்வீட்டறையில்தான், அப்போஸ்தலர்களும் மற்றவர்களும் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்காகக் காத்திருக்க கூடியிருந்தார்களென்று அனுமானிக்கப்படுகிறது. இந்த ஓர் அறையானது இன்னமும் பாரம்பரியத்தினால் அடையாளம் காண்பிக்கப்படுகின்றது. எனினும் கிறிஸ்தவர்கள்மேல் குறிப்பாய் பொறாமை கொண்டிருநத முகமதியர்களின் கட்டுப்பாட்டில் இது உள்ளது.

அதே நாளின் மாலைவேளையில், இயேசு பன்னிரெண்டு பேரோடுகூட இவ்வறையில் கூடினார் ; அனைத்து ஏற்பாடுகளும் அங்கு செய்யப்பட்டிருந்தன. அவர்கள் யூதருடைய பஸ்காவை, அதற்காகக் குறிக்கப்பட்ட வேளையில் ஆசரிப்பதற்கென கூடியிருந்தார்கள். ஆட்டுக்குட்டியானது சுடப்பட்டிருந்தது, புளிப்பில்லாத அப்பம் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தது மற்றும் கசப்பான கீரைகளும் இருந்தன. அனைத்துமே ஆதிக் கட்டளைக்கு ஒத்திருக்கவேண்டும் என்பதில் நாம் நிச்சயமாயிருக்கிறோம். ஏனெனில் புதிய யுகம்

இன்னும் வராததினால் இயேசுவும், அவருடைய அப்போஸ்தலர்களும் மற்ற யூதர்களைப்போன்று, யூதப் பிரமாணத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் கட்டுப்பட்டவர்களாய் இருந்தனர். இயேசுவின் பலிக்கான தெய்வீக அங்கீகரித்தலையும், முழுமையான அர்ப்பணித்தலின் வாயிலாக அவருடைய சீஷர்களாகியிருந்தோர் அனைவருக்குமான தெய்வீக ஏற்றுக்கொள்ளுதலையும் குறிக்கின்ற, பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்கான வேளை வருவதுவரையிலும், நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு அம்சமும் கட்டப்பட்டிருந்தது.

**இராஜ்ஜியத்தின் கனங்கள் விரும்பப்பட்டன**

தாங்கள் மாபெரும் நிகழப்போவதற்கு முன்பாக நிற்பதை உணர்ந்துகொள்வதற்கு விலகியிருந்து, இயேசு சீக்கிரமாய் இராஜாவாக சிங்காசனத்தில் அமருவார் என்று அப்போஸ்தலர்கள் நம்பியிருந்தனர். அவரது சிங்காசனத்தில் அவரோடுகூட தாங்கள் உட்காருவதற்கான அவருடைய வாக்குத்தத்தத்தை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். இந்த வாக்குத்தத்தத்தை அடைவது மிகவும் அருகாமையில் காணப்படுவதுபோன்று அவர்களுக்குத் தோன்றினபடியால், தாங்கள் இராஜ்யத்தில் பெறப்போகின்ற கனத்தின் அளவு நிலைகள் குறித்த சிந்தனைகளே அவர்களுக்குக் காணப்பட்டது. இதற்காகப் பிடிவாதமாய்ப் போராடவில்லையனில், மிகுந்த கனமிக்க ஸ்தானங்கள் தங்களுக்குக் கிடைக்காது என்று அவர்கள் எண்ணினதாக தோற்றமளிக்கிறது. அவர்களுடைய மனநிலையை உணர்ந்தவராக அவர்களிடத்தில் இயேசு, ''புறஜாதியாரின் இராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது. உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்'' என்றார்.

இவைகள் அவர்களுக்குப் புரிந்துகொள்வதற்குக் கடினமாய்க் காணப்பட்ட புதிய தரநிலைகளாய் இருந்தன; மற்றும் இன்றுவரை இது இயேசுவின் பின்னடியார்களால் முழுமையாய்ப் புரிந்துகொள்வதற்குசிரமமாகவே உள்ளது. மாம்சத்தில் பிரதான பணிவிடைக்காரனாய்க் காணப்படுபவனே, இராஜ்யத்தில் பிரதானமானவனாய்க் காணப்படுவான். பணிவிடைக்காரர்கள் எல்லாரிலும் பெரிய பணிவிடைக்காரர் கர்த்தராகிய இயேசுவே ஆவார். இதே கொள்கையானது அவரது பின்னடியார்கள் அனைவருக்கும் நன்மை பயக்கும் என்கிறார் நம் ஆண்டவர். இவர்களில் யார் மிகுந்த உண்மையுடனும், மிகுந்த ஊக்கத்துடனும் மிகுந்த வைராக்கியத்துடனும் சகோதர சகோதரிகளுக்குப் பணிவிடை செய்கிறாரோ, அப்படிப்பட்டவரேதேவனிடத்திலான தனது தயவை அதிகரிக்கச் செய்கிறவனாயும், மேசியாவின் இராஜ்யத்தில் மிகவும் பெரிதான ஒரு ஸ்தானத்திற்காக தன்னை ஆயத்தம் பண்ணுகிறவனாயும் இருப்பார்.

ஏதாகிலும் அற்பமான பணிவிடையைச் செய்வது என்பது, உயர் ஸ்தானத்திற்கான தங்களது அபாத்திரத் தன்மையை ஒப்புக்கொள்ளுகிறதாய் இருக்குமென்ற எண்ணத்தினாலும், எவரும் பணிவிடைக்காரனுடைய பணியை எடுப்பதற்கு விரும்பாததினாலும், பாதங்கள் கழுவுவதற்கான எந்த ஏற்பாடுகளையும் சீஷர்கள் செய்யவில்லை. மணற்பாங்கான தேசத்தில், பாதரட்சைகளானது பயன்படுத்துகையில், பாதம் கழுவுதலானது மிகவும் இன்றியமையாததாய்க் காணப்படுகின்றது. கடிந்துகொள்ளும் வகையில் இயேசு பந்தியிலிருந்து எழும்பி, தம்முடைய சீஷர்களுக்காக இந்த அற்பமான பணிவிடையைப் புரிந்து, தாழ்மை குறித்த பாடத்தின் முக்கியத்துவத்தைக் கூறி, அவர்கள் ஒருவருக்கொருவர் செய்ய வாய்ப்பு பெற்றுள்ள பணிவிடையானது எவ்வளவு தாழ்வானதாக இருப்பினும் அதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டுமென்று சுட்டிக் காண்பித்தார்.

இப்படிப்பினையானது, அனுசரிக்கப்படவேண்டிய ஒரு சடங்காச்சாரமாய் இராமல், மாறாக ஒரு கொள்கைக்கான விளக்கப்பாடமாக இன்னமும் நம் மத்தியில் காணப்படுகின்றது. கர்த்தருடைய சகோதரருள் ஒருவருக்கு செய்யப்படுகின்றதான எந்த ஓர் தாழ்வான பணிவிடையும், பாதம் கழுவப்படுவதற்கு ஒத்திருக்கின்றது.

**யூதாஸின் வாழ்க்கையில் நெருக்கடி**

பஸ்கா இராப்போஜனம் அதாவது ஆட்டுக்குட்டி, கசப்பான கீரைகளோடும் புளிப்பில்லா அப்பத்தோடும் புசிக்கப்பட்டது. புளிப்பில்லாத அப்பங்களானது தடிமனான ரொட்டிபோலிருக்கும். சிலசமயம் இறைச்சியின் சாற்றை எடுப்பதற்கு, கரண்டிக்கு பதிலாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இயேசு இருதயத்தில் வியாகுலமடையத் தொடங்கி, ''என்னோடுகூட என் விருந்தினர்களாக, என் குடும்பத்தின் அங்கங்களாக உணவருந்திக்கொண்டிருக்கும் பன்னிரெண்டு பேராகிய உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பதற்கு திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறான்'' என்று சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளது.

இப்படியாகக் கூறுவதில் இரண்டு நோக்கம் இருந்திருக்கவேண்டும். முதலாவதாக இவ்வார்த்தைகளானது, ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த, காட்டிக்கொடுத்தலைக் குறித்து இயேசு நன்கு அறிந்திருந்தார் என்பதை சீஷர்களுக்கு காண்பிப்பதற்காக. இதனால் இயேசுவுக்கு ஏதோ எதிர்பாராத விதத்தில் நடந்துவிட்டதென அல்லது தெய்வீகத்திட்டத்திற்குப் புறம்பாக ஏதோ நடந்துவிட்டதென அவர்கள் எண்ணமாட்டார்கள். இரண்டாவதாக, யூதாஸை திகைக்கப் பண்ணவும், அவரை சிந்திக்கத் தூண்டவும், அவருக்கு கடைசிக் கண்டனமாக காணப்படுவதற்கென இயேசு இவ்வார்த்தைகளைக் கூறியிருக்கக்கூடும். துரோகியின் நடக்கையானது நமது அறிவுக்கெட்டியவரை, வெட்கக்கேடான ஒன்றுதான். ஆனால் அந்த துரோகி, யாருக்கு எதிராக சதித்திட்டம் தீட்டுகிறானோ,

அந்நபரிடமிருந்து விருந்தோம்பலைப் பெற்றுக்கொண்டு, அந்நபரின் அப்பத்தைப் புசிக்கையில், அவனது நடக்கையானது இரட்டிப்பான விதத்தில் வெட்கக்கேடானதாயிருக்கும்.

சீஷர்கள் மத்தியில் அச்சம் பரவினது; ஒருவர் பின் ஒருவராக, ''நானோ ?'' என்று கேட்டார்கள். ''என்னை நீர் குறிப்பிடவில்லை அல்லவா ?'' என்பதே இக்கேள்வியின் உட்கருத்தாகும். ''நானோ'' என்று பொதுவாகக் கேட்கப்பட்ட கேள்வியை யூதாசும் கேட்டார். அப்போஸ்தலனாகிய யோவான், இயேசுவுக்கு அடுத்து உட்கார்ந்திருந்தார், மேலும் ஆண்டவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று ஆண்டவரிடம் கேட்கும்படிக்கு, பரிசுத்த பேதுரு யோவானுக்குச் சைகை காட்டினார். அது அநேகமாக இயேசுவுக்கு மாத்திரமே கேட்கத் தக்கதாக மெல்லிய குரலில் கேட்கப்பட்ட கேள்வியாய் இருந்தது. ''நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான்'' என்பதாக மெல்லிய குரலில் நமது கர்த்தருடைய பதில் இருந்தது. விசேஷித்த அக்கறையைச் சுட்டிக்காட்டும் வண்ணமாக, ஒரு விசேஷித்த துணிக்கையை(தோய்த்து) ஆயத்தம் பண்ணி, அதை யூதாசிடம் கொடுத்தார். இப்படியாகவே பரிசுத்த யோவானும், பரிசுத்த பேதுருவும் காரியத்தினை அறிந்துகொண்டார்கள்.

இது நடந்த கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, யூதாஸ் புறப்பட்டுப்போனார்; ''சாத்தான் அவனுக்குள் புகுந்தான்'' என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. தனது சிறந்த நண்பனை முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கும் காரியத்தினை யூதாஸ் ஆலோசித்து, தீர்மானம்செய்து, ஆதாயத்தைக் கணக்குப் பார்த்தபோது, பொல்லாங்கனின் ஆவியானது அவனிடத்தில் முற்றிலுமாய் ஆதிக்கம்கொண்டது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு இயேசு நிறுவினதும், இன்று கிறிஸ்தவர்களால் ஆசரிக்கப்படுகிறதுமான நினைவுகூருதலின் இராப்போஜனத்தின்போது, யூதாஸ் இருந்திருக்கமாட்டார் என்பது முற்றிலும் சாத்தியமே.

**நினைவுகூருதலின் முக்கியத்துவம்**

இயேசுவினால் நிறுவப்பட்ட நினைவுகூருதலின் இராப்போஜனமானது, பஸ்கா இராப்போஜனத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகவும், தனித்தன்மையுடையதாகவும் இருக்கின்றது. எனினும் இவைகள் ஒன்றுக்கொன்று நெருங்கின தொடர்புடையவையாகும். ஏனெனில் ஒன்று நிழலாகவும், மற்றொன்று அதற்கான முழுமையான உதாரணமாய் அல்லது இன்னும் மேலான அர்த்தமுள்ள உயர்தரமான மாதிரியாய்க் காணப்படுகின்றது. ஒன்றில் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவை அடையாளப்படுத்துவதற்கு, சொல்லர்த்தமான ஓர் ஆட்டுக்குட்டி பயன்படுத்தப்படுகின்றது. மற்றதில், அதாவது முழுமையான உதாரணத்தில் அப்பம் பிட்கப்படுதலானது, இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்துகிறது.

யூதர்கள் தங்கள் தேசத்தின் பிறப்பையும், எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து தங்கள் தேசம் அடைந்த விடுதலையையும் கொண்டாடுகின்றனர். இதன் ஆரம்பமானது, எகிப்தியர்மீது பத்தாம் வாதை கடந்துவந்தபோது, தங்கள் முதற்பேறானவர்களை கடந்துபோனதில் துவங்கினது. அந்தப் பஸ்கா இரவின்போது தப்புவிக்கப்பட்ட இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள், மேசியாவின் இராஜ்யமாகிய காலைவேளை வருவதற்கு முன்னதாக பாவம் என்னும் இரவு நிலகின்ற தற்காலத்தில் கடந்துபோகின்ற அல்லது தப்புவிக்கப்படுகின்ற முதற்பேறானவர்களின் சபைக்கு நிழலாய் இருக்கின்றனர் என்று பரிசுத்த பவுல் நமக்குக் காண்பிக்கின்றார்.

கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூருதலானது மாதந்தோறும் அல்லது காலாண்டுதோறும் அல்லது வாரந்தோறும் ஆசரிக்கக்கூடாது என்றும், இது யூதருடைய பஸ்காவிற்கான முழுமையான உதாரணமாய்க் கருதப்பட்டு, யூதருடைய பஸ்கா ஆசரிக்கப்படுகின்ற அதே காலத்தில், வருடத்திற்கு ஒருமுறை ஆசரிக்கப்படவேண்டும் என்ற முடிவுக்கு வேதமாணவர்கள் அதிகதிகமாய் வந்துகொண்டிருக்கின்றனர்.

தாம் நிறுவின இராப்போஜனத்தின் முக்கியத்துவத்தை அப்போஸ்தலர்களுக்கு விளக்கினபோது, அவர்கள் அவரது வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டார்களென நாம் உணர்ந்துகொள்ளக்கூடாது. மாறாக அவர் ஏற்கனவே முன்னறிவித்திருந்ததுபோல, அவர்கள் பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்களையும், வெளிச்சமூட்டுதலையும் பெற்றுக்கொண்டபிற்பாடு, பரிசுத்தஆவியானது இக்காரியங்களை அவர்களது கவனத்திற்குக் கொண்டுவந்து, அவைகளின் அர்த்தத்தினை அவர்கள் புரிந்துகொள்ள உதவியது.''இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது'' என்ற இயேசுவின் வார்த்தைகளின் உட்கருத்தினை இப்பொழுது நாம் காணமுடியும். சிலர் எண்ணுவதுபோல், அப்பமானது அவரது உண்மையான சரீரமாகவும், திராட்சரசமானது அவரது உண்மையான இரத்தமாகவும் மாறினது என்ற அர்த்தத்தில் அவர் கூறியிருக்கமாட்டார் என்று நாம் உணர்ந்துகொள்கிறோம். அதற்கு மாறாக, அவர் அத்தருணத்தில் இன்னமும் தம்முடைய உண்மையான சரீரத்தையும் மற்றும் தம்முடைய உண்மையான இரத்தத்தையும் பெற்றிருந்தார். ''இந்த அப்பமானது, உங்களுக்காகப் பிட்கப்படப்போகிற என் சரீரத்திற்கு அடையாயமாய் இருக்கின்றது ; மற்றும் நாளை உங்களுக்காக சிந்தப்படப்போகிற என் இரத்தத்திற்கு – என் ஜீவன் கொடுக்கப்பட்டதற்கு, இந்த திராட்ச ரசம் அடையாளமாய் இருக்கின்றது'' என்ற அர்த்தத்திலேயே அவர் கூறினார்.

அந்த அப்பத்தைப் புசிப்பதினாலும், அந்தச் சொல்லர்த்தமான பாத்திரத்தில் பானம்பண்ணுவதினாலும், சீஷர்களுக்கு விசேஷமான புண்ணியம் உண்டாகும் என்ற அர்த்தத்தில் இயேசு கூறினதாகவும் நாம் எண்ணிவிடக்கூடாது. இவைகளுக்கப்பால் நாம் சரியாக நோக்கிப்பார்ப்பவர்களா–

யிருந்து, அவர் பின்வரும் அர்த்தத்திலேயே குறிப்பிட்டார் என்று பார்க்கவேண்டும்; அதென்னவெனில், ''என்னுடைய மரணம் பெற்றுத்தந்த புண்ணியங்களில் நீங்கள் விசுவாசத்தினால் பங்கெடுக்கும்போது மாத்திரமே, என் சீஷர்களாக உங்களுக்கு அளிக்கப்பட்ட மாபெரும் ஆசீர்வாதங்களை நீங்கள் பெறமுடியும்'' என்பதேயாகும். இயேசுவின் மரணமானது, தங்களுடைய பாவங்களுக்காகவே என்றும், அதுவே தங்களைப் பரமபிதா ஏற்றுக்கொள்வதற்கான அடிப்படையாயிற்று என்றும் அப்போஸ்தலர்கள் நம்பினார்கள். கிறிஸ்துவின் ஜீவனை அவர்கள் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டால் மாத்திரமே, தாங்கள் இந்த அனைத்து ஆசீர்வாதங்களையும் உண்மையில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று உணர்ந்துகொண்டார்கள்.

இந்த அப்பம் மற்றும் பாத்திரத்தின் மற்றுமொரு முக்கியமான அர்த்தத்தினைப் பரிசுத்த பவுல் அடிகளார் நமக்கு சுட்டிக் காண்பிக்கிறார். அவர் ; கிறிஸ்து மற்றும் அவரது சபையின் ஒருமைப்பாட்டினைக் குறித்து தெரிவிக்கின்றார்.மேலும் ஒரே அப்பமும், ஒரே பாத்திரமும் காணப்படுவதை நமக்கு தெரிவிக்கிறார். முதலாவதாக இந்த அப்பமானது கிறிஸ்து இயேசுவை அடையாளப்படுத்துகின்றது. மேலும் இரண்டாவது பார்வையில் பார்க்கும்போது, கிறிஸ்துவின் பலியின் மூலமாக நீதிமானாக்கப்பட்ட பிற்பாடு, அவரது பின்னடியார்கள் அனைவரும் அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகவும் மற்றும் பிட்கப்பட்டு வரும் ஒரே அப்பத்தின் பாகங்களாகும் சிலாக்கியத்தினையும் உடையோராய் உள்ளனர். இதுபோலவே கிறிஸ்துவின் இரத்தத்தில், அவரது பலியின் புண்ணியத்தில் பங்கெடுத்தபிறகு, அவரது உண்மைப் பின்னடியார்கள் அனைவரும், அவரோடு அங்கத்தினர்களாயும், அந்த ஒரே பாத்திரத்தில் பங்கெடுப்போராயும் கருதப்படுகின்றனர்.

அப்போஸ்தலருடைய வார்த்தைகளைக் கேளுங்கள்: ''நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா ? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா ? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோமே'' ''கடவுளைப்போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்'' (1கொரிந்தியர்10:16,17 – திருவிவிலியம்).

**புதிய உடன்படிக்கை முத்திரையிடப்படுதல்**

இயேசு பாத்திரத்தைக் குறித்து பேசுகையில், திராட்சப்

பழரசமானது புதிய உடன்படிக்கைக்குரிய இரத்தத்தினை

அடையாளப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். நியாயப்பிரமாண உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கையாக இருக்கிறது. இது யூதர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதில் தோல்வியுற்றது. காரணம் இதை அவர்களால் கைக்கொள்ள முடியவில்லை. மேலும் இதனால் அவர்கள் பூமியின் மற்ற ஜாதிகளை ஆசீர்வதிக்கவும் தகுதியற்றவர்களானார்கள். ஆனால் மோசேயைக் காட்டிலும் மேன்மையான அல்லது சிறந்த அல்லது உயர்ந்த ஒரு புதிய மத்தியஸ்தரால், மேம்பட்ட ஒரு புதிய உடன்படிக்கையானது அறிமுகப்படுத்தப்படும் என்று தேவன் வாக்களித்தார். பழைய நியாயப்பிரமாணம் நிறைவேற்ற முடியாமல் போனவைகளை, புதிய உடன்படிக்கையானது நிறைவேற்றுமென தேவன் அறிவித்திருக்கிறார். ஏனெனில் புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, அதன் மத்தியஸ்தராகிய மேசியாவினால் அவரது இரண்டாம் வருகையில் தொடங்கி வைக்கப்படும். வல்லமையிலும், மாபெரும் மகிமையிலும் ஸ்தாபிக்கப்படும் அவரது இராஜ்யமானது, மனுக்குலத்தை ஆண்டு, ஆசீர்வதித்து, கற்பித்து, இந்த பாக்கியமான வாய்ப்புகளுக்கு இணங்குகிற யாவருக்கும், ''கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை'' அருளும்.

இயேசுவின் மரணம் அந்தப் புதிய உடன்படிக்கையை முத்திரையிடுகின்ற அல்லது பலனளிக்கும் இரத்தத்தை உருவாக்கியது. ஆனால் இயேசுவின் இரண்டாம் வருகையின்போது அவரது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில் தொடங்கி வைக்கப்படுகின்ற ஆயிரவருட யுகத்தின் புதிய உடன்படிக்கையின்கீழ், சபையானது ஆசீர்வதிக்கப்படுவதில்லை. அந்தப் புதிய உடன்படிக்கைக்கு முன்னதாகவே சபை ஆசீர்வதிக்கப்பட இருக்கிறது. ஆம், கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அவர்களது அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியங்களானது(இரத்தமானது) புதிய உடன்படிக்கையை முத்திரையிடுகின்ற அவரது சொந்த பலியின் ஒரு பாகமாகக் கருதப்படுகின்றது. ஆகையால் கிறிஸ்துவின் முழுச் சரீரமாகிய சபையானது, அவரது பாத்திரத்தில் அவரோடுகூட பானம்பண்ணுதலில் – பூமிக்குரிய உரிமைகள், சிலாக்கியங்கள், ஜீவனையே பலிசெலுத்துவதில் அவரோடுகூட பங்கடைந்து முடிவதுவரையிலும், புதிய உடன்படிக்கையானது முழுமையாய் முத்திரையிடப்படமுடியாது.

**பலியினாலான உடன்படிக்கை**

இதற்கிடையில் இயேசுவும், சபையும் தங்கள் வெகுமதியை நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் அல்லது புதிய உடன்படிக்கையின்கீழ் பெற்றுக்கொள்ளாமல், மாறாக, பலியினாலான உடன்படிக்கை என்று அழைக்கப்படும் ஒரு விசேஷித்த உடன்படிக்கையின்கீழ்ப் பெற்றுக்கொள்கின்றனர். கிறிஸ்து மற்றும் சபையினுடைய இந்த உடன்படிக்கையைக் குறித்து சங்கீதங்களில், ''பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின

என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்'' (சங்கீதம் 50:5). என்று கர்த்தர் கூறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தரோடுகூட இந்த விசேஷித்த பலியினாலான உடன்படிக்கைக்குள் பிரவேசிப்பவர்கள், கூட்டிச் சேர்க்கப்படுதலானது, 1800 வருடங்களுக்கும் மேலாக, இதுவரையிலும் நடைபெற்று வருகின்றது. பலியானது கிட்டத்தட்ட முடிவடைந்துவிட்டது என்றும், சீக்கிரத்தில் பலிசெலுத்தியவர்களாகிய கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் அனைவரும் மகிமைப்படுத்தப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் மாற்றமடைந்து, "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்'' என்ற அவரது வாக்குத்தத்தப்படி, அவர்களது கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்றும் நம்புவதற்கு நமக்கு அநேக காரணங்கள் உள்ளது.

இனி பாத்திரத்தில் பானம்பண்ணுவதில்லை என்று நமது கர்த்தர் குறிப்பிட்டார் ; அவர் பானம்பண்ணவுமில்லை. பாத்திரத்தில் அவர் பானம் பண்ணும்வேலையானது, அடுத்தநாளில் கல்வாரியில் நிறைவேறியது. அங்கு அவர், பிதா தமக்கென ஊற்றின பாத்திரத்தில் பானம்பண்ணி நிறைவேற்றி முடித்தார். அதே பாத்திரத்தைப் பிதா, இயேசுவின் பின்னடியார்கள் அனைவருக்குமாக ஊற்றிக்கொடுத்துள்ளார். மற்றும் சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படப் போகின்ற இராஜ்யத்தில், அவரது உடன்சுதந்திரர்களாக காணப்படவேண்டுமானால், அவர்களும் அவரது பாத்திரத்தில் பானம்பண்ணவேண்டும், அதோடுகூட அவரது பிட்கப்பட்ட சரீரத்தின் புண்ணியங்களில் பங்கெடுக்கவேண்டும்.

இதுவே இராஜ்யத்தில் விசேஷித்த ஸ்தானங்களைக் கேட்டுக்கொண்ட தமது சீஷர்களான பரிசுத்த யோவானுக்கும், பரிசுத்த யாக்கோபுக்கும் கொடுக்கப்பட்ட நம் கர்த்தருடைய வார்த்தைகளின் உட்கருத்தாகும். இயேசுவோ: "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா ?(உங்களுக்கு விருப்பமா)'' என்று கேட்டார். அவர்களும் தங்களது விருப்பத்தினை மனப்பூர்வமாய்த் தெரிவித்தனர். அவர்கள் விருப்பத்துடன் காணப்பட்டால், அவர்கள் தமது பாத்திரத்தில் பானம்பண்ணத்தக்கதாக அவர் பார்த்துக்கொள்வார் என்றும் , அவர்கள் வேண்டுதலை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்றும் இயேசு அவர்களுக்கு உறுதியளித்தார். இப்படியாகவே அவரது பின்னடியார்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்படும். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிற–வர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்''(ரோமர்2:8)என்று வேதவாக்கியங்கள் அவரது பின்னடியார்களுக்கு உறுதியளிக்கின்றது.

----------

**R 5544**

# உபத்திரவத்தில் சந்தோஷமாயிருத்தல்
# REJOICING IN TRIBULATION

**"என் நிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே " – மத்தேயு 5:11,12.**

நம் கர்த்தர் இவ்வார்த்தைகளை அவரது சீஷர்களிடத்தில் பேசினார். அவரது விசேஷித்த செய்தியாளர்களாக தெரிந்தெடுக்கப்பட்ட அவரது அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்ல, இந்த யுகம் முழுவதுமாக இருக்கின்ற அவருடைய பின்னடியார்களுக்கும் அவர் முகவரியிட்டு பேசியிருந்தார். ஒரு சீஷன் என்பவன் ஒரு மாணவன், பிறரால் கற்பிக்கப்படுபவன். இயேசுவின் சீஷர்கள் அனைவரும் நம் பாடத்தின் ஆதார வசனத்தை தங்களுக்கென எடுத்துக்கொள்ளவேண்டும். "நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்'' என்பது, துன்பம் தேவனுடைய ஒரு தயவு என்பதைக் குறிக்கிறது. மனுஷர் உங்களை நிந்திக்கும்போது, அந்த நிந்தனையின் பொருட்டு அல்ல, கிறிஸ்துவினிமித்தமாக அவர்கள் இக்காரியங்களை உங்கள்பேரில் பொய்யாய்க் கூறுவார்களானால், அது பிதாவினிடமிருந்து வருகிற தயவு என்று எண்ணிக்கொள்ளுங்கள்.

துன்புறுத்தப்படவோ அல்லது தனக்கெதிராக தீயன பேசப்படவோ ஒருவரும் இயல்பாகவே தெரிந்தெடுப்பதில்லை. உயரிய ஐஸ்வரியங்களைக்காட்டிலும் நற்பெயரே அதிகமாக மதிப்பிடத்தக்கதாக வேத வசனங்கள் கூறுகின்றன. ஆனால் கிறிஸ்துவினிமித்தம் நாம் துன்புறுவோமானால், கர்த்தர் நமக்கு ஈடுசெய்வார் என்று நாம் அறிவோம். இங்கு துன்புறுகிற நம் அனைவருக்கும் கர்த்தருடைய ஏற்பாட்டின்படி கூலிபெறக்கூடிய ஒரு மாலைநேரம் இருக்கிறது. இப்படியாக பரலோகத்தில் நாம் பொக்கிஷங்களைச் சேர்க்கிறோம். தற்போது அவருக்காக சுமப்போமானால் நாம் துன்புறுகிற அனைத்திற்கும் மிக அதிகமாக, நித்திய கனமாகிய மகிமை நமக்காக சேமித்து வைக்கப்படுகிறது.

இந்த தரநிலையிலிருந்து பார்க்கும்போது, நாம் துன்பத்தை நிஜமாகவே விரும்பவேண்டும். அவசியமற்றவகையில் அதை நம்மீது வருவிக்க முயற்சிக்கக்கூடாது, அதற்காக நாம் போராடக்கூடாது. மாறாக, நாம் துன்பத்தில் குறைவுபட்டோமானால், கர்த்தருடைய உண்மை சீஷர்களாயிருப்பதற்கான ஆதாரங்களில் ஒன்றில் குறைவுபடுகிறோம் என்று உணர்ந்துகொண்டு, தேவனுடைய ஏற்பாட்டின்படி அது நம் பங்காகும்போது, நாம் சந்தோஷப்படவேண்டும். சிலர், தாங்கள் செய்த தீய அல்லது விவேகமற்ற காரியத்திற்காக

ஆசீர்வாதமும் இல்லை. நமக்கெதிராக தவறாக குற்றம் சாட்டப்படும்போதும், சத்தியத்தினிமித்தமுமாகவே ஆசீர்வாதம் வருகிறது.

"கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்". ஆகவே நாம் தேவபக்தியாய் ஜீவிக்கிறோம் என்ற இந்த ஆதாரத்தை பெற்றிருக்கிறோமா என்று காண, நம் ஜீவியங்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். "உலகிற்கு வந்து ஒவ்வொரு மனிதனையும் பிரகாசிப்பிக்கிற உண்மை ஒளி" கர்த்தரே. நாம் குறைவாய் ஒளிவீசும் விளக்குகளாயிருக்கிறோம். நம் வெளிச்சங்களை உண்மையாய் பிரகாசிக்கச் செய்யும்பொழுது, நமக்கு நாமே துன்பங்களை நம்மீது வருவித்துக்கொள்வோம். நம் தனிப்பட்ட விஷயத்தில் துன்பத்திலிருந்து தப்பிப்பதே நம் தரப்பிலுள்ள மேலான ஞானம் அல்லது சாமார்த்தியத்தின் விளைவாக இருப்பதாக நாம் கற்பனை செய்யாதிருப்போமாக. "தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்பது வாக்குத்தத்தம், வேதாகமம் அளிக்கும் உறுதிப்பாடு. நம் உண்மைத்தன்மையின் இந்த ஆதாரத்தை விரும்பவேண்டுமே தவிர, நாம் இதை வரவழைத்துக் கொள்ளக்கூடாது. நம் பாடத்தின் ஆதார வசனத்தில் நம் எஜமான் பேசியவாறு, "பாக்கியவான்களில்" ஒருவராக இருக்க விரும்பவேண்டும். கிறிஸ்துவினிமித்தமாக நான் துன்புறுகிறேனா ? என்று அப்பொழுது நம்மை நாமே கேட்போமாக ! தேவனிடத்தில் முழு உண்மைத்தன்மையோடு நாம் இருக்கிறோமா ? நாம் நம் வெளிச்சத்தை முறையாகப் பிரகாசிக்கிறோமா என்று காண, நம் இருதயங்களை ஜெபசிந்தையோடு நாம் பரிசோதிக்கவேண்டும். புத்திரனுக்குரிய இந்த ஆதாரத்தில் நாம் குறைவுபட்டோமானால், இதற்கான காரணம் என்ன ? என்று நம்மை நாம் வினவவேண்டும்.

**துன்பம் உண்மைத்தன்மையின் உறுதியான விளைவு**

நம் பத்திரிக்கை ஆசிரியரிடம், "எனக்கு எந்த துன்பமுமில்லை, எந்த எதிர்ப்புமில்லை, அனைத்தும் எனக்கு சாதகமாகவே செல்வதாகத் தோன்றுகிறது" என்று ஒரு சகோதரி கூறினாள். அவள் துன்பத்தில் இருப்பதாகத் தோன்றினது. அவள் எப்படி இருக்கவேண்டும் என்று அவளுக்குத் தெரிந்த அளவு அவள் உண்மையுள்ளவளாக இருக்கிறாளா அல்லது இல்லையா என்பதைக்காண, அவளுடைய சொந்த இருதயத்தைப் படிக்கும்படி அந்த சகோதரியிடம் கேட்டோம். "ஒருவேளை நீங்கள் உங்கள் துன்பங்களை அப்படிப்பட்ட கிருபையாக நீங்கள் ஏற்றதினிமித்தம், நீங்கள் அவைகளின்கீழ் மகிழ்ச்சியாயிருக்கிறீர்கள்"என்று அந்த சகோதரிக்கான மறுமொழியாக நாம் கூறினோம். அப்படி நினைத்தால் மகிழ்ச்சியாக இருக்கும் என்று அந்த சகோதரி பதிலளித்தாள். பின்னாளில் அவளுக்கு என்ன வந்தாலும் தாங்குவதற்கான பலத்தை அடையும்படிக்கு, கர்த்தர் அவளுக்கு நேரத்தை அனுமதித்திருக்கிறார் என்று நாங்கள் நினைப்பதாக அவளிடத்தில் ஒரே விளக்கத்தைக் கூறினோம். அதற்காக ஜெபிக்கவேண்டும் என்று அவளுக்குக் கூறினோம். ஓரிரு வருடங்களில் அந்த சகோதரியை மீண்டுமாக நாங்கள் பார்த்தோம்.அந்த சூழ்நிலைகளை நினைவுபடுத்தி, ஏதாவது துன்பத்தை அவள் இன்னும் அடைகிறாளா என்று கேட்டோம். அதற்கு அவள்; "ஆம் ! நான் ஏராளமான துன்பத்தை அடைந்துள்ளேன், ஆயினும் நான் மகிழ்ச்சியாகவும் அதில் குதூகலமடைந்தும் வருகிறேன்" என்று பதிலளித்தாள்.

நாம் சரியான கோணத்தில் பாடத்தை அணுகும்வரை உபத்திரவத்தில் சந்தோஷமடைய முடியாது. நமக்குநாமே இதைச் செய்யமுடியாது ஆகவே கர்த்தரிடத்திற்கு விஷயத்தை எடுத்துச்செல்லவும், அவரோடு கலந்து உரையாடவும் வேண்டியுள்ளது. இயேசுவோடு சிறு உரையாடலை நாம் நடத்தி முடித்தபிறகு, நம் விசுவாசம் அவரைப் பற்றிக்கொள்ளும். கிறிஸ்துவுக்குள்ளாக துன்புறுவதிலும், இன்னல்களை அடைவதிலும் மிகுந்த இன்பமும் மகிழ்ச்சியும் அடையவேண்டும் என்று அப்.பவுல் நமக்குக் கூறுகிறார். மேலும் அப்போஸ்தலர் பேதுரு: "நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள், ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவி உங்கள்மேல் தங்கியிருக்கிறது. அவர்களாலே தூஷிக்கப்படுகிறது, உங்களாலே மகிமைப்படுகிறது. அதனால் உங்களில் ஒருவனும் ... பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்"–1பேது 4:14–16 என்று அறிவிக்கிறார்.

நம் ஆண்டவர், அவரது நாட்களிலிருந்த பிரதான ஆசாரியர்கள் மற்றும் மத அதிகாரிகளுடைய மனப்பான்மையைக் கண்டு ஆச்சரியப்படவில்லை. அவர்களுடைய எதிர்ப்பையும், விரோதத்தையும் அடைவோம் என்று அவர் ஆரம்பத்திலிருந்தே அறிந்திருந்தார், இதைக்காட்டிலும் வேறுவிதமாக எதிர்பார்க்கவேண்டாம் என்று தம் சீஷர்களிடத்தில் அவர் எச்சரித்திருந்தார். "இருள் ஒளியைப் பகைக்கிறது" என்று, கர்த்தருக்கும் அவரது பாதச்சுவடுகளை உண்மையாய்ப் பின்பற்றுவோர்க்கும் எதிராக ஏன் துன்பம் வருகிறது என்பதற்கான காரணத்தை அவரே நமக்குக் கூறுகிறார். இருள் சாத்தானைக் குறிக்கிறது, பாவத்தையும், நீதிக்கு எதிரான எல்லாவற்றையும் இது குறிப்பிடுகிறது. தேவன் மாபெரும் ஒளியாக குறிப்பிடப்படுகிறார், அவரிடத்தில் இருள் சிறிதளவேனும் இல்லை, வெளிச்சம் குணப்படுத்துகிறது, நன்மையளிக்கிறது, ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது.

வெளிச்சம் இருளைக் கண்டிப்பதால் இருளுக்குரியவர்கள் வெளிச்சத்துக்குரியவர்களைப் பகைக்கின்றனர்,இருளோ கண்டிக்கப்படுவதை விரும்புவதில்லை. நீதி இருக்குமிடத்திலெல்லாம் பாவத்தையும் இருளையும் கண்டிக்கிறது. நம் கர்த்தர் வெளிச்சத்துக்காக நின்றார். அவர் சத்தியத்தை, பரலோகப்பிதாவை

பிரதிநிதித்துவப்படுத்தினார். இருளில் இருந்தோர், எந்தளவுக்கு அவர்கள் இருளில் இருந்தார்களோ, அந்த அளவுக்கு அவருக்கு எதிராயிருந்தார்கள். இவர்களில் சிலர் அறிந்தும் , சிலர் ஓரளவு அறியாமையிலும் செய்தனர். ''அவிசுவாசிகளாகிய அவர்களுடைய மனதை, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் குருடாக்கினான்''. வெளிச்சத்தை இருளாகவும், இருளை வெளிச்சமாகவும் காண்பிக்க சாத்தான் தந்திரசாலியாக இருந்துவருகிறான்.

**நல்ல மனசாட்சியில் அநேகர் ஒளியை எதிர்க்கிறார்கள்**

உலகிலிருக்கின்ற அநேகர், தேவனுக்கும் நீதிக்கும் எதிராயிருக்கின்ற உண்மையானது, அவர்கள் ஒரு விதியாக தீய இருதயத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதால் அல்ல, மாறாக, இருளை விரும்பத்தக்கதாகவும், ஒளியை விரும்பத்தகாததாகவும் உண்டாக்கினதில் சாத்தான் வெற்றிபெற்றிருப்பதனாலேயே ஆகும். இவ்வாறே இயேசுவின் நாட்களில் மத அமைப்புகளிலும் இருந்தன. மேலும் இன்றையநாளின் மதத்துக்குரிய அமைப்புக்களிலும் இதே நிலைமை நிலவுவதாக நாம் நம்புகிறோம். தர்சுசைச் சேர்ந்த சவுல் சாத்தானால் குருடாக்கப்பட்டவர்களில் ஒருவராக, ஒரு குறிப்பிட்ட காலம் இருந்தார்.இயேசுவின் பின்னடியார்களை துன்புறுத்துவதில், தேவனுடைய ஊழியத்தை தான் செய்வதாக மெய்யாகவே நம்பியிருந்தார். ஆனால் கர்த்தரால் அவர் பிடிக்கப்பட்டு, வெளிச்சம் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டபோது, அவர் கர்த்தருக்கு உண்மையுள்ளவராக தம்மை நிரூபித்தார்.

அவ்வாறே, இப்பொழுது அறிவிக்கப்பட்டுவருகிற சத்தியத்துக்கும் வெளிச்சத்துக்கும் எதிராக சிலர் இன்றைய நாளில் இருப்பதாக நாம் நம்புகிறோம். அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆயினும் அவர்களுடைய இருதயங்கள் கர்த்தரிடத்தில் முற்றிலும் உண்மைத்தன்மையோடு இருக்குமானால், அவர்கள் தங்கள் பிரதிஷ்டையின் பொருத்தனைகளுக்கு உண்மையாய் இருப்பார்களானால், ''கதவு அடைக்கப்படுமுன்பாக''அவர்களுக்கு சத்தியம் வெளிப்படுத்தப்படும்.''சகோதரரே, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறீர்கள்''(1தெச5:4–5). ''ஞானவான்களோ உணர்ந்துகொள்வார்கள்''(தானி12:10). ''புத்தியில்லாத கன்னிகைகளுக்கு'' சத்தியஅறிவு விரைவில் வரும். முழு உலகத்தின்மீதும் கூடிய சீக்கிரம் வரவிருக்கிற மகா உபத்திரவத்தின்போது, தங்கள் கறைபடிந்த ஆடைகளை கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவிக்கொள்வார்கள். விரைவில் தேவ அறிவாகிய வெளிச்சம் முழு பூமியையும் நிரப்பும். ஆனால் சாத்தான் ''இப்பிரபஞ்சத்தின் தேவனாக'' இருக்கும்வரைக்கும், உலகில் இருப்போர் அவனது ஆவியை உடையோராயிருப்பர். இவர்களுக்கும் கர்த்தருடைய ஆவியை உடையோராயிருந்து அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் முரண்பாடு அதேகாலஅளவுக்கு நீடித்திருக்கும்.

வெளிச்சத்துடனான இருளின் எதிர்ப்பு பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்படலாம். நம் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்கள் வாழ்ந்த நாட்களில் யூதர்களால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுதல் நிகழ்ந்தன. பின்னாளில், நீண்ட நூற்றாண்டுகளாக தேவனுடைய வசனம் புறக்கணிக்கப்பட்டு, சத்தியம் ஒட்டுமொத்த தப்பறைகளினால் ஒளியற்றதாக மறைக்கப்பட்டபோது, புராட்டஸ்டன்ட்கள் கத்தோலிக்கர்களாலும், கத்தோலிக்கர்கள் புராட்டஸ்டன்ட்களாலும், கத்தோலிக்கர்கள் மற்றும் புராட்டஸ்டன்ட்களால் யூதர்களும் துன்புறுத்தப்பட்டனர். தேவ வசனத்தைக் கற்கத் தவறியதாலும், அதன் போதனைகளைப் பின்பற்றாததாலுமே இவைகள் நடந்தேறின. ஆனால் இந்த இருண்டகாலங்களில் வெகுசிலரே வசனத்தை அணுகினர்.

நம் கர்த்தருக்கு நேரிட்ட சில எதிர்ப்புக்கள் வெளிப்படையாயும், சில மறைவாயும் இருந்தன. அப்போஸ்தலர்களில் அநேகர் தங்கள் ஆண்டவரைப்போலவே வன்முறையால் துன்புற்று மரித்தனர், சுவிசேஷ யுகம் முழுவதும் உண்மையுள்ளோராயிருந்த அநேகர் கொடூரமான மரணங்களால் துன்புற்றனர். தற்காலத்தில் வெளிப்புறமான துன்புறுத்தல்களுக்கு சட்டம் அனுமதியளிப்பதில்லை அல்லது அதை பெரிய அளவில் பொறுத்துக்கொள்வதில்லை.

**தற்போதைய துன்புறுத்தல் முறைகள்**

தேவனுடைய உண்மையான பிள்ளைகளுக்கு எதிராக பல வகையிலான தீமைகளையும் பொய்யாய்ச் சொல்லுதல், பழிவாங்குதல், அவதூறுசெய்தல் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி துன்புறுத்தல்கள் எல்லா நேரத்திலும் செய்யப்படுகின்றன. ''இருதயத்தின் நிறைவினின்றே வாய்பேசும்'' என்று வேதாகமம் அறிவிக்கின்றது. இன்றைய நாளில் சத்தியத்தை எதிர்ப்பவர்களால் அவதூறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன, மற்றும் வில்லத்தனமான மோசமான வெளிப்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அவதூறு செய்பவர்கள் தற்காலத்தில் வெளிப்படையாக, தனித்து வன்முறையில் ஈடுபட வல்லமை பெற்றிராததால், இதுவே பிரதான ஆயுதமாக அவர்களுக்கு உள்ளது. பொது உணர்வும், சட்டமும் அதை அனுமதிப்பதில்லை. ஆனால் துன்புறுத்தலானது சூழ்நிலைகளால்வெறுமனே நிர்வகிக்கப்பட்டாலும், அதே முத்திரை மற்றும் அதே ஆவியுடையதாய் உள்ளது. எல்லா வகையிலான தீமையையும் பொய்யாய்க் கூறுபவர்கள் தங்கள் குற்றச்சாட்டுக்கள் தவறானவை என்று அறிந்திருந்து, இவர்கள் வல்லமை பெற்றிருந்தார்களானால் சிலுவையிலறையவும் நெருப்பில் எரிக்கவுமான தன்மைகொண்டவர்கள். தற்கால சட்டங்களும் பொது உணர்வுகளும் தனிப்பட்ட வன்முறையை பிரயோகிக்க அனுமதிக்காதிருப்பதால், தேவனுடைய வசனமாகிய சத்தியத்தைப் பிரகடனப்படுத்துபவர்களது செல்வாக்கை அழிக்கவும், அவர்களது நற்பெயரை சிதைக்கவும்

நாடி, எல்லா வகையிலும் தவறான குற்றச்சாட்டுக்களை வலுக்கட்டாயமாக கொண்டுவருவதில் திருப்தியடைவார்கள்.

நம் பாடத்தின் ஆதாரவசனம், துன்புறுத்தப்படுபவர்களின் சரியான மனப்பான்மையை சுட்டிக்காட்டுகிறது. தேவன் நமக்கெதிராக இருக்கிறதற்கான ஆதாரங்களாக இவைகளை விசித்திரமாக நினைத்து, இப்படிப்பட்ட அனுபவங்களால் சோர்வுற்று, தாழ்வு மனப்பான்மையடைவதற்கு பதிலாக, நாம் தலைகீழான முடிவுக்கு வரவேண்டும். ''கர்த்தரும் இதே விதத்திலான அனுபவத்தை அடைந்திருந்தார், கடந்தகாலத்தில் அவரது பிள்ளைகளும் இவைகளை அடைந்திருந்தனர்'' என்று நமக்குநாமே சொல்லிக்கொள்ள வேண்டும். ஆகவே ''உலகம் உங்களைப் பகைத்தால்(குறிப்பாக, மதஉலகம் – அந்த உலகம் அவரைப் பகைத்தது) ஆச்சரியப்படாதிருங்கள்; அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்''–யோவா15:18. என்று நம் ஆண்டவர் முன்னெச்சரித்திருக்கிறார். நாம் சோர்வடைவதற்கு பதிலாக சந்தோஷப்படவேண்டும். துன்பப்படுகையில் எவராலும் சந்தோஷமாயிருக்கமுடியாது, ஏனெனில் துன்பம் துக்ககரமானது என்றாலும், ''பரலோகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும்'' என்பதால் நாம் சந்தோஷப்படவேண்டும். இங்கு என்ன செழுமையை நாம் அடையவில்லையோ அதை பரலோகத்தில் நாம் அடைந்திருப்போம்.

தற்போதே தாங்கள் சில நல்ல காரியங்களை அடையும் நோக்கம் கொண்டிருப்பதாக பொதுஉடைமைக் கொள்கையாளர்கள் கூறுகிறார்கள். அவர்கள் வருங்கால ஆசீர்வாதங்களுக்காக காத்திருக்க மனதின்றி, போதுமான விசுவாசத்தை பெற்றிருப்பதில்லை. ஆனால் நம் பாடத்தின் ஆதார வசனத்தில் குறிப்பிடப்பட்ட வகுப்பார், தேவனிடத்திலும் அவரது வாக்குத்தத்தங்களிலும் விசுவாசம் வைத்திருந்து.கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டிருந்து, இந்நேரத்தில் கொடுக்கப்படும் அனுபவங்கள் தங்களுக்கு, ''மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறதற்காக'' கிரியை செய்கிறது (2கொரி4:17) என்று புரிந்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் தேவனுடைய வேளைக்காக காத்திருப்பதில் நிறைவடைகிறார்கள். தாங்கள் தேவனுடைய பக்கம், சத்தியத்தின் பக்கம், சரியான பக்கம் இருப்பதையும், தாங்கள் நீதியினிமித்தம் சகிப்பதையும் உணர்ந்திருந்து, இந்த இன்னல்கள் ஒரு கனம் மட்டுமே நீடித்திருக்கிற தற்காலிகமானவை என்பதை உணர்ந்து, தங்கள் இருதயத்தில் சந்தோஷமடைகிறார்கள். ஏனெனில் நித்திய ஜீவனோடு ஒப்பிடுகையில் தற்போதைய வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே. மகிமையான அழியாமை ஜீவன் மிக அருகாமையிலுள்ளது. இதில் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை, கர்த்தரோடு என்றைக்கும் ஜீவிக்கும் மகிழ்ச்சியை நாம் பெற்றுக்கொள்வோம்.

**முன்னெச்சரிக்கப்பட்டவர்கள் பலப்படுத்தப்பட்டார்கள்**

தம் பின்னடியார்களுடைய மனப்பான்மையை உலகம் பாராட்டும் என எதிர்பார்க்கக்கூடாது என்று அவர்களுக்கு ஆண்டவர் நியாயமான எச்சரிப்பை அளித்தார். ஒருவர் பாவத்தைவிட்டு நீதியின் பாதையை தெரிந்தெடுப்பாரானால்,அவரை உலகம் மதிக்கும், அவருடைய குணநலனின் தகுதியை அனைவரும் பார்ப்பார்கள் மற்றும் அவருக்கு சிறப்பு மரியாதை செய்வார்கள் என்று ஒருவர் நன்கு நியாயப்படுத்தலாம். ஆனால் பாவத்தின் ஆளுகையின்கீழுள்ள தற்காலத்தில் இதை நாம் எதிர்பார்க்கக்கூடாது. இராஜ்யத்துக்குள் நுழைவதற்கான மிகவும் விசாலமான வழியாக இது இருக்கும். பின்னர் பலர் இந்தப் போக்கை மனிதனின் நன்மைக்காக, அது அவர்களுக்குக் கொண்டுவரும் வளமைக்காக எடுக்கக்கூடும். இத்தகைய நிலைமைகளின்கீழ், ராஜ்யத்தின் மேன்மைகளுக்கான நமது தகுதியை கர்த்தர் ஒருபோதும் நிரூபிக்கமுடியாது.

நம் ஆண்டவரே பெயல்செபூல் என்று அழைக்கப்பட்டாரானால், அவரது வீட்டின் அங்கங்கள் சிறப்பாக நடத்தப்படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது. பரிபூரணராக இருந்த அவர், விரோதியால் குருடாக்கப்பட்டிருந்தவர்களால் பிசாசுகளின் பிரபு என்று தூற்றப்பட்டாரானால், அவருடைய பின்னடியார்கள் அதுபோன்ற நடத்துதலையே சந்திக்க எதிர்பார்க்கவேண்டும். ஏனெனில் நாம் நீதியின் தரத்தை நிலைநிறுத்துவதில் அவரைக்காட்டிலும் குறைவுள்ளோராயிருக்கிறோம். அவருடைய குணாதிசயத்தை பிறரது பார்வைக்கு இழிவாக தோற்றமளிக்கச் செய்ய அவருடைய பகைவர்கள் முயற்சித்தபோது, அவர் பழிக்குப்பழி செய்யவில்லை. மதத்தலைவர்கள் மற்றும் போதகர்களாயிருந்தவர்களுடைய தவறான செய்கையை, தவறான குணத்தை முறையான தருணங்களில் இயேசு சுட்டிக்காட்டியிருந்தாலும், பழிவாங்கும் உணர்வில் அவர் அதைச் செய்யவில்லை. அவர்கள் உண்மையற்றவர்களாயும், பரிசுத்தமற்றவர்களாயும் மாய்மாலக்காரர்களாயும் இருப்பதை அவர் பல்வேறு தருணங்களில் குற்றம் சாட்டியிருந்தாலும், அவர்களுக்கு காயமேற்படுத்தும் நோக்கத்தில் எதையும் அவர் கூறினதில்லை. அதற்கு மாறாக அவர்களது முறையற்ற இருதயநிலையை அவர்களுக்கு காண்பித்து, அவரது அறிவுரையினால் அவர்கள் ஆதாயமடையும் விருப்பத்திலேயே இவ்வாறு பேசினார். அவர்களுடைய தலைவர்கள் துரிதப்படுகிற சாக்கடைக்குள் விழுவதை தடுப்பதற்காகவும், இந்த பார்வையற்றவர்களின் குருட்டுத் தலைவர்களது நிஜமான நிலைமையை மற்றவர்கள் காண்பதற்கு உதவவும் அவர் முயற்சித்தார்.

**ஆண்டவருக்கான கடுமையான பரீட்சை**

பரிசேயர்களும், சதுசேயரும், வேதபாரகரும் ஆண்டவருக்கு எதிராக தவறான குற்றச்சாட்டுக்களை உருவாக்கவும், அவர் பேசின வார்த்தைகளுக்கு தீய

கட்டுமானங்களை சுமத்தவும் முயற்சித்தபோது, இந்த சோதிக்கும் நிலைமைகள் எல்லாவற்றிலும் அவர் பொறுமையாயிருந்தார். அந்த செய்கைமுறைக்கு தம்மை ஒப்புவித்தார். அப்படிப்பட்ட பழித்துரைத்தலில் துன்புற தம் பரிசுத்த குமாரனை ஏன் பிதா அனுமதித்தார்? அவ்வாறு தீமைசெய்தவர்களை அவர் ஏன் அடித்து வீழ்த்தவில்லை? என்று கேள்விகேட்கக்கூடும். பிதா தமக்கு பிரியமான குணாதிசயத்தை குமாரன் நிரூபிக்கும்படி விருப்பங்கொண்டார். மேலும் இயேசுவின் உண்மைத்தன்மையை பரீட்சிக்க அவர் விரும்பினார் என்பதே இதற்கு பதிலாகும். இந்த அவமதிப்புகளுக்கெதிராக அவர் பணிந்து கீழ்ப்படிந்தாரா? அல்லது அவர் கோபப்பட்டாரா? "இவை எதுவும் என்னிடம் இல்லை, இப்படிப்பட்ட அவமானங்களை சகிக்கும்படி இவ்வுலகிற்கு வரவில்லை" என்று அவர் கூறினாரா? அவருடைய வலிநிறைந்த அனுபவங்கள், பிதாவினிடத்திலான அவருடைய உண்மைத்தன்மைக்கான பரீட்சைகளாக இருந்தன.

தம்மை மரணபரியந்தம் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது பிதாவின் சித்தமாயுள்ளது என்று இயேசு அறிந்திருந்தார். இதை செய்வதற்கு அவர் உடன்பட்டுமிருந்தார். இப்போது கடினமான பரீட்சை என்னவெனில், பிதாவினிடத்தில் உண்மைத்தன்மையோடு நிலைத்திருந்து, அவரது தீர்மானங்களை நிறைவேற்றுவாரா? என்பதே. அப்படி செய்வாரானால் மேசியாவாக இருப்பதற்கு தகுதியுள்ளவராய் இருப்பார், தேவனுடைய தெய்வீகக் குமாரனாக நித்தியத்துக்கும் தகுதிவாய்ந்தவராக இருப்பார். நம் கர்த்தருடைய அனுபவங்கள் அனைத்தும் தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டுள்ளன. இந்த தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்பொருட்டு அவர் அவமரியாதைகளை அடையவேண்டியது அவசியமாகிறது. அவற்றை அவர் முறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதில் அவர் ஒரு தகுதியான மாதிரியாக தம் பின்னடியார்களுக்கு இருந்தார் என்று அப்.பேதுரு காண்பிக்கிறார். அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாயிருந்து, தம்மை அவமதிப்பவர்களுடைய தவறான செய்கைகளுக்கு பிதா சில தண்டனைகளைக் கொடுப்பார் என்று தேடாதது ,நமக்கு ஒரு நல்லதொரு பாடமாக இருக்கிறது. அவ்வாறே நாம் அவரது அடிச்சுவடுகளில் நடக்கவேண்டும்.

**துன்புறுத்தும் ஆவி இன்னும் இங்கே இருக்கிறது**

இங்கு நீதிமான் ஒருவருமில்லை, பரிபூரணர் ஒருவருமில்லை என்பதை நம் விஷயத்தில் நாம் உணர்கிறோம். ஆகவே நம் விரோதிகள் நம்மை இழிவுபடுத்த சில காரணங்கள் இருக்கலாம். நம் அபூரணங்களில் சிலவற்றை அவர்கள் கண்டு, அதிலிருந்து எவற்றையேனும் எடுத்து பெரிதுபடுத்தக்கூடும். "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினையைக் குறித்து ஏதோ புதுமையென்று திகைக்காதீர்" என்று அப்.பேதுரு கூறுகிறார். நம் கர்த்தருக்கு எதிராக பொய்யாய் எல்லாவிதத்திலும் அவர்கள் தீமை பேசினார்களானால், நமக்கெதிராகவும் எல்லா வகையிலும் தீமை பேசுவார்கள் என்று நாம் உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.அவர் பொறுமையாய் அதை தாங்கினதுபோல நாமும் நமக்கு வரும் எல்லாவற்றையும் பொறுமையோடு எடுத்துக்கொள்ளவும், பிதா முன்னறிந்து நம் நன்மைக்காகவும், அவரது மகிமைக்காகவும் எதை அனுமதிக்கிறாரோ அதைத்தவிர, வேறு எதுவும் நமக்கு நடப்பதில்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். பிதா நம் எஜமானருக்குக் கொடுத்த பாத்திரத்தில் நாம் பானம்பண்ணுவதற்கென நமக்கான ஒரு பகுதியை அவர் விட்டுச்சென்றிருக்கிறார். அப்பாத்திரத்திலுள்ள அனைத்தும் தீர்ந்தபிறகு, மகிமை கனம் அடைவோம், ஆனால் அது இப்போதல்ல.

தேவனிடத்திலும் அவரது சத்தியத்திற்கும் உண்மைத்தன்மையோடு நடப்பவர்கள், இயேசுவின் நாளில் துன்புறுத்தப்பட்டு, தவறாக நடத்தப்பட்டதுபோல் அல்லாமல், மாறுதலுக்குள்ளான தற்கால நிலைமைகளின்கீழ் நடத்தப்படுவார்கள் என்று நாம் இயல்பாகவே எதிர்பார்க்கலாம். ஆனால் இவ்விஷயத்தை கண்ணோக்குவதற்கு வேறொரு வழி இருப்பதாக நாம் நம்புகிறோம். இயேசு இன்றைக்கு மாம்சத்தில் இங்கு இருப்பாரானால், உலகசிந்தை உடையோரால் , குறிப்பாக பெயர்கிறிஸ்தவ அமைப்புக்களால் துன்புறுத்தப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டிருப்பார் என்று நாம் நம்புகிறோம். தற்போது நேரடியாக சிலுவையில் அறைவதற்கு பதிலாக, அல்லது கூர்முனையில் நெருப்பிலிடுவதற்கு பதிலாக, அவர்கள் அவரைப் பொதுஜனங்கள் முன்பு சித்திரவதை செய்யும் துன்புறுத்தலின் மிகவும் சுத்திகரிக்கப்பட்ட வடிவம் இப்போது உள்ளது. துன்புறுத்தலின் ஆவி இன்னும் இங்கே உள்ளது.

இயேசுவின் பின்னடியார்கள் எஜமானின் போதனைகளுக்கு உண்மையாய் இருக்கும் அளவுக்கேற்ப, அவர்கள் அதேஅளவுக்கு கிறிஸ்துவின் ஆவியை எதிர்க்கும் எல்லாவற்றோடும் இசைவில்லாதிருப்பார்கள். மேலும் அதே சமஅளவுக்கு அவர்கள் தவறாக சித்தரிக்கப்படுவார்கள், துன்புறுத்தப்படுவார்கள். இயேசுவின் நாளில் வேதபாரகர்களிடத்தில் ஏராளமான ஜனங்கள் பயபக்தியாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் தோரா அடங்கிய தோல்பையை அகலமாக்கி, நியாயப்பிரமாண எழுத்துக்களை மிகத்துல்லியமாக வலியுறுத்தி, தசமபாகங்களை செலுத்தும்படி வற்புறுத்தினர். இயேசு கனத்தையோ, உயர் ஸ்தானத்தையோ தேடாதிருந்தார், மாறாக, பாவத்திலிருந்து விலகும்படியும், அவருடைய பாதச்சுவடுகளில் நடக்கும்படியும், எல்லா அநீதி மற்றும் அசத்தியத்திற்கும் எதிராயிருந்து, சத்தியத்துக்காக நிற்கும்படியும் ஜனங்களிடத்தில் வேண்டுகோள் விடுத்தார். உலக மனப்பான்மையுள்ளோரின் இருதயங்களில் இந்த வேண்டுகோளானது இணக்கமான பதிலை ஏற்படுத்தவில்லை.

இந்தக் காரணத்தின்பொருட்டே உலகமானது இன்னும் மாற்றமடைந்திருக்கவில்லை என்று நாம் கூறுகிறோம். உலகம், தேவவசனத்துக்கும் அதன் ஆவிக்கும் – குறிப்பாக மதத்துக்குரிய உலகமும் இன்னும் எதிராகவே இருக்கிறது. ஆயினும், நம் கர்த்தர் மாம்சத்திலிருந்த நாட்களில் இருந்ததைப்போலவே மதத்தலைவர்களால் குருடாக்கப்படாதிருந்தால், சாதாரண ஜனங்கள் சுவிசேஷத்தை மகிழ்ச்சியுடன் கேட்க முனைகிறார்கள் என்பது இன்னும் உண்மையே. ஆனால் இயேசுவின் காலத்தைப்போலவே இன்றைய நாளில் அநேகர், தங்களது ஆவிக்குரிய மேய்ப்பர்களாகப் பார்த்து பழகினவர்களின் தவறான பிரதிநிதித்துவ ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கின்றனர். உலகம் தன் ஜனங்களாக நம்மிடத்தில் பரிவு காண்பித்து, நம்மைக்குறித்து நன்றாய்ப் பேசி நாம் பிரபலமாகவேண்டும் என்றால், நாம் எஜமானின் வார்த்தைகளில் உரைக்கப்பட்ட கண்டனத்துக்குள்ளாக நேரிடும்; “எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது, உங்களுக்கு ஐயோ, அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்” – லூக் 6:26.

**விநோதம் என எண்ணாதிருங்கள்**

இதற்கு மாறாக, நம் சிறந்த முயற்சிகளையும் தாண்டி, எதிர்ப்பு நம்மை குழப்பமடையச்செய்து, ஆட்கொள்வதைக் காணும்போது, சந்தேகத்துடன் பார்க்கப்படும்போது, மகிமையான வெளிச்சத்தை பிறருக்கு எடுத்துச்சென்று, அதன்மூலம் நம் சொந்த இருதயங்களில் ஆசீர்வதிக்கப்பட்டிருந்து, நன்மைசெய்யவேண்டும் என்ற நம் சுயநலமற்ற முயற்சியின்மீது, தகுதியற்றவன் என்ற கட்டுமானங்கள் வைக்கப்படும்போது ஆச்சரியப்படாதிருப்போமாக அல்லது தீங்கிழைக்கப்பட்டதாக எண்ணாதிருப்போமாக. ஏனெனில் இயேசுவும் சந்தேகத்திற்கிடமின்றி இதே காரணத்துக்காகவே எதிர்ப்புக்குள்ளானார்.

கிறிஸ்துவின் ஆவி என்பது வெளிச்சத்தின் ஆவி. இருளின் ஆவியோ உலகத்துக்குரியது. தீமையின்பேரில் அனுதாபம் கொள்வோர் அல்லது வெளிச்சம் இருளாகக் காணப்படுமளவு குருடாக்கப்பட்டிருப்போர் அனைவரும் வெளிச்த்தை எதிர்ப்பர். உலகில் சுயநலம் அதிக அளவில் இருந்துவருகிறது, ஜனங்கள் இதனை அடிக்கடி சாதகமாகப் பயன்படுத்துவதனால் ஏமாற்றப்படுகிறார்கள். அவர்கள், தங்கள் சக ஜனங்களை ஆசீர்வதிக்கும் நோக்கத்தால் மட்டுமே யாராவது செயல்படக்கூடும் என்று நம்பி, தாமதிப்பதைக்கண்டு நாம் ஆச்சரியப்படமுடியாது.

பாதிரியார் தொழிலை ஊக்குவிக்க ஆர்வமாயிருக்கும் சிலர், தங்களுடைய நலன்களுக்கு விரோதமாகனவைகள் எவைகளாயிருந்தாலும் அவைகளை முறித்தெறிய முனைகிறார்கள். “நீங்கள் எங்களை எதிர்க்கிறீர்கள்” என்று அவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் வெளிச்சத்தை மட்டுமே ஏந்தியிருக்கிறோம் என்று அவர்களுக்கு பதிலுரை கூறுகிறோம். ஆனால் வெளிச்சம் ஜனங்களை அடையும்போது, தங்களுடைய செல்வாக்கை குறைத்து மதிப்பிடும் என்று அவர்கள் உணருகிறார்கள். சில பகுதிகளில் நிலவுகின்ற சத்தியத்துக்கான பலமான எதிர்ப்பின் இரகசியமாக இது இருப்பதாக நாம் நம்புகிறோம். பல விஷயங்களில் நல்ல மனிதர்களாயிருக்கிறவர்கள் பெரிய எண்ணிக்கையிலிருந்தாலும் அவர்கள் வெளிச்சத்துக்கு எதிராக போரிடுகின்றனர் என்று நாம் நம்புகிறோம். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று உணராதிருக்கின்றனர். அதாவது, அவர்கள் தன் அறிவின்றி, பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்தில், தப்பறையாகிய அறியாமையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நாம் யூகிக்கலாம். இதன் காரணமாகவே தேவன் அன்பாயிருக்கிறார் என்று தேவகுணாதிசயங்களை அவர்களுக்கு எடுத்துக்காண்பிக்கிற கர்த்தருடைய ஜனங்களுக்கு முன்பாக, அவர்கள் திரையை உயர்த்திப்பிடித்து பகைமை காண்பிக்கின்றனர். இதனால் முரண்பாடு தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.

எதிர்ப்பின் மற்றொரு கட்டம், பணவிஷயங்களைக் குறித்தது. கர்த்தருக்காக கொடுக்கப்படுவது, ஜனங்களை ஏளனப்படுத்திப் பெறக்கூடாது. அவர்களிடமிருந்து பிடுங்கக்கூடாது, அவர்களிடமிருந்து பணம் பறிக்கக்கூடாது, மாறாக எதைக் கொடுத்தாலும் அது, தன்னார்வ காணிக்கையாக இருக்கவேண்டும் என்று நாம் கோருகிறோம். நாம் பல நூற்றாண்டுகளாக வழக்கத்துக்கு எதிர்மாறாக இயங்குகிறோம். நம் இரண்டு சகோதரர்களிடம் ஒரு பாப்டிஸ்ட் ஊழியக்காரர் கூறும்போது ; “இருக்கைகள் இலவசம், வசூல் இல்லை”என்ற பாஸ்டர் ரஸ்ஸலின் விளம்பரத்தை சிந்திப்போம் என்கிறார். “நமக்கு வசூல் கிடைக்கவில்லையென்றால், அல்லது வசூலிக்கும் உண்டியல்பெட்டிகளை எடுப்பது முறையான காரியமல்ல என்று ஜனங்கள் சிந்திக்கத் துவங்கினால், நாம் எங்கே இருப்போம்!” என்கிறார்.

**அவரது ஜனங்களின் கடிந்துகொள்ளுதல் விரைவில் மறைந்துவிடும்**

நம் ஆண்டவர் எவ்வித காரணமுமின்றி பகைக்கப்பட்டார். நம் அனுபவமும் கூடுமானவரை அவ்வாறே இருக்கட்டும். வெறுப்பு, பகைமை, தீமை, கொலையின் ஆவி நம்மீது குவிக்கப்பட்டிருப்பது, முற்றிலும் தகுதியற்றது என்று நாம் காண்போமாக. நம் ஜீவியங்கள் நம்மால் முடிந்தஅளவு முழுமையாக சத்திய வெளிச்சத்தை பிரதிபலிக்கும்படி நம் முயற்சிகள் இருக்க பிரயாசைப்படுவோமாக. எல்லாக் காரியங்களும் முடிந்தவரை உன்னதமாயும் நேர்மையாயும் இருக்கட்டும். நம் வார்த்தைகளும் செயல்பாடுகளும் , கூடுமானவரை நாம் ஊழியம்செய்யும் கர்த்தருக்கே மகிமை சேர்ப்பதாக. முழு மனுக்குலத்துக்கும், விசேஷமாக விசுவாச

வீட்டாரிடத்திலுமான நம் அன்பின் பிரசங்கங்கள் தற்கால சத்தியத்தினால் ஒளியூட்டப்பட்டிருக்கிறது இல்லையா ?

நாம் உண்மையுள்ளோராய் இருந்தோமானால் இன்னும் மிக சிறிதுகாலத்திற்குள், நம் கர்த்தரோடு நாம் மகிமைப்பட இருக்கிறோம் என்று நாம் நம்புகிறோம். பின்பு, ஒரு புதிய யுகப்பிரிவு துவங்கப்படும், தற்போது நம்மைப் பகைத்தவர்கள், முதன்மையாக விரோதியினால் குருடாக்கப்பட்டு, தவறாக நடத்தப்பட்டதனால்'', கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாகிய நமக்கு முன்பாக தங்கள்இருதயங்களில் வணங்குவார்கள். நாம் அவர்களுக்கு ஒளியூட்டி அவர்களை மன்னித்து, நம் தேவனின் பரிபூரண சாயலையும் ரூபத்தையும் அடைய அவர்களுக்கு உதவிசெய்து, அவர்களை மேம்படுத்தும் ஆசீர்வதிக்கப்பட்ட பாக்கியம் பெற்றிருப்போம்.

**நம் அனுபவங்கள் எவ்வளவுதூரம் கண்காணிக்கப்படுகின்றன ?**

எந்தளவுக்கு தேவன் தம் பிள்ளைகளில் அனுபவங்களை கண்காணிக்கிறார் என்ற கேள்வி சிலருக்கு எழக்கூடும். ''என் பிதா எனக்கு ஊற்றின பாத்திரத்தில் நான் பானம்பண்ண வேண்டாமா ? என்று நம் ஆண்டவர் கூறினார். அப்படியானால் அது எப்படி நம் பாத்திரமாகும் ? தேவன் நம் பிதாவாகவும் இருக்கவில்லையா ? நாம் கிறிஸ்துவின் அங்கங்களாக இருக்கவில்லையா ? பிதா நமக்கு பாத்திரத்தில் ஊற்றாவிடில் யார் ஊற்றுவார் ? தேவன் எந்த தீமையிலும் பங்குபெறுபவர் அல்ல என்று நாம் அறிவோம். அப்படியானால் அவர் எப்படி தம் பிள்ளைகளுக்கு தீமை வரும்படி ஏதாகிலும் செய்யமுடியும் ?

எல்லா வகையான தீய சக்திகளும் ஆதிக்கங்களும் நம்மை சூழ்ந்திருக்கின்றன என்று நாம் பதிலுரைக்கிறோம். விழுந்துபோன தூதர்கள் மற்றும் சாத்தானுடையதுமே இந்த தீய ஆதிக்கங்களாகும். ''உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்'' – 1பேது 5: 8. கர்த்தருடைய ஜனங்களை எப்படித் தாக்கலாம் என்று விழுந்துபோன தூதர்களும் தேடி சுற்றித்திரிகின்றனர். ஆனால் பிதா அதை அனுமதித்தாலொழிய நமக்கெதிராக எது வந்தாலும் அவர்களுக்கு எந்த வல்லமையும் இல்லை.அவரிடத்தில் நெருக்கமாக நம்மை காத்துக்கொள்வோமானால் புது சிருஷ்டிகளாகிய நம்மைக் காயப்படுத்த , நம்மைத்தொடும்படி அவர் தீய ஆதிக்கங்களை அனுமதிக்கமாட்டார். நாம் அதனை சரியாய்ப் பயன்படுத்தி அது நமக்கு நன்மையைத் தரும் என்று அவர் பார்க்காவிட்டால், அவர் நமக்கு தீங்கோ அல்லது காயமோ நேரிடாதபடி பாதுகாப்பார்.

**நமது நன்மைக்கென்றே அனைத்தும் நடக்கிறது**

உலகின் எதிர்ப்பையும் நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் இப்பிரபஞ்சத்தின் அதிகாரியான சாத்தானோமனிதருடைய சிந்தைகளைக் குருடாக்குவதில் வெற்றியடைந்து, சத்தியத்துக்கு பதிலாக தப்பறையையும் ஒளிக்கு பதிலாக இருளையும் கொடுத்து, நீதியின் வழியையும் தேவனுக்கு கீழ்ப்படிதலையும் முட்டாள்தனமாகவும், விரும்பத்தகாததாயும், தீவிரமாகத் தோன்றும்படியும் செய்கிறான். தீயவன் மற்றும் அவனது கூட்டாளிகளின் நேரடி செல்வாக்கைத்தவிர, உலகின் ஆவியை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ கொண்டிருப்போரை, கர்த்தருடைய பிள்ளைகளுக்கெதிராக, முற்றிலும் இயற்கையான வழியில் , குறிப்பிட்டளவு எதிர்ப்பைக் கொண்டுவருகிறான். உதாரணமாக, நம் கர்த்தருடைய மரணம் நெருங்கினபோது, தம் அனுபவங்களின் மிகப்பெரிய உச்சகட்டத்தைப்பற்றி அப்போஸ்தலர்களிடையே பேசிக்கொண்டிருந்தபோது.. அதாவது அவர் எருசலேமுக்குப் போகவிருப்பதையும், அங்கே மனுஷர் அவரை சிலுவையிலறைவர் என்றும் கூறினார். அப்பொழுது பேதுரு, கர்த்தாவே இந்த வழியில் உங்கள் மனதை இயக்க அனுமதிக்காதீர், நீர் இப்பூமிக்கு மாபெரும் ராஜாவாக இருப்பதற்காக வந்திருக்கிறீர், நீங்கள் சிலுவையிலறையப்படவிருக்கும் அந்த எண்ணத்தை உங்கள் சிந்தையில் நுழையவிடவேண்டாம் ! என்று கூறினார். அப்போது கர்த்தர் பேதுருவிடம் திரும்பி; ''போ அப்பாலே சாத்தானே'' என்று கூறினார். அந்நேரத்தில் பேதுரு கர்த்தருடைய விரோதியாக இருந்தார்.

தேவனுடைய பிள்ளைகள் தங்கள் வைராக்கியத்தில் எதை அதிக கனமுள்ளதாகவும், நமக்கான அனுகூலமளிக்கும் வழி என்று சிந்திக்கிறார்களோ, அதற்கு உலகம் விரோதிகளாகிறது. காரியங்களை இப்படி தீவிரமான கண்ணோட்டத்தில் எடுத்காதிரு, அப்பொழுது நீ மேன்மையடைவாய் என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். இது நம் பிரதிஷ்டைக்குரிய பொருத்தனைக்கு எதிரானது. அவர்களுடைய நல்ல முயற்சிகளை நாம் எதிர்க்கும்போது, அவர்கள் நம்மை முறியடிக்க முயற்சிக்கிறார்கள், மற்றும் அவர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளுக்கு நம்மை மீண்டும் கொண்டுவர முயல்கிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நமக்கு உலகத்தின் சிறந்த கொள்கையானது : நன்மை செய், சமூக முன்னேற்றத்திற்காகவும், சீர்திருந்துதலுக்காகவும் வேலைசெய், மருத்துவமனைகள் கட்டுதல், அநாதை இல்லங்களை ஏற்படுத்துதல் போன்றவைகளை செய், மாறாக, பழைய ஏற்பாட்டை கற்க அதிக நேரத்தை செலவிடாதே. அப்படி செய்தால் அவர்கள் உன்னை தீவிரவாதி அல்லது மதவெறியன் என்பர். இவ்வாறு உலகம் பரிவிரக்கத்தோடு நம்மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும். நம்மை நிரூபிப்பதற்காக நம் பிதா இந்த தாக்கங்களை நம்மீது வரப்பண்ணுகிறார். அவரது அன்பில் நாம் நம்மைக் காத்துக்கொள்ளும் வரையில்,அவரில் நாம் முழுமையாக நிலைத்திருக்கும்வரையில், எது வந்தாலும் நம் ஆவிக்குரிய நன்மைக்கே கிரியை செய்யும்படி, கர்த்தர் நம் அனுபவங்களை மேற்பார்வையிடுகிறார். எவ்விதத்திலும் வேறு எதுவும் நமக்கு நேரிடுவதில்லை. நமக்கான தேவனுடைய நேரம் வந்திருக்கும்வரை, மரணம்கூட நம்மைத்தொட வலிமையற்றதாகிவிடும்.

நம் மாம்சம், எப்பொழுதும் இருக்கும் நம் நிலையான எதிரி. அவ்வாறு இல்லை என்று அது சொல்ல முயற்சிக்கிறது. இவ்விஷயத்தை இம்மாதிரியாக எடுத்துச்செல்லாதீர்கள் என்கிறது. நம் மாம்சம் உலகத்துடன் இசைவாகச் செல்ல சாய்கிறது. ஆனால் நம் புது சிருஷ்டியோ, இயேசுவும், பரி. பவுலும். பரி. பேதுருவும். பரி. யோவானும்– பலியின் வழியிலும் துன்பத்தின் வழியிலும் நடந்தனர் என்று பதிலளிக்கிறது. அவர்கள் விசேஷித்தவர்களாயிருந்தனரே என்று மாம்சம் இக்கருத்துக்கு பரிந்துரைக்கிறது. ஆனால் கர்த்தருடைய உண்மையுள்ள பிள்ளைகள் அனைவரும் இதே வழியையே பின்பற்ற வேண்டும் என்று வேதாகமம் நமக்கு போதிக்கிறதை நாம் அறிந்திருக்கிறோம். அதன்படி இவர்கள் எல்லாரும் துன்பத்தை அடையவேண்டும் – (2தீமோ3;12).

எல்லோரும் சிலுவையிலறையப்படுவதில்லை, அல்லது கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறையில் தள்ளப்படுவதில்லை, அல்லது சிரச்சேதமோ அல்லது வெட்டப்படுவதோ இல்லை, அநேகமாக நாம் இந்த அனுபவங்களில் எதையும் பெறவேண்டுவதில்லை. ஆனால் நாம் துன்புற்றாக வேண்டும். எனவே நம் மாம்சம் அமைதியாய் இருக்கும்படி நாம் உத்தரவிடுகிறோம், மேலும் நாம் அடைகின்ற அனுபவங்களில் நாம் சந்தோஷமடைகிறோம், ஏனெனில் “அவரோடுகூட நாம் பாடுகளை சகித்தோமானால் அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்”– 2தீமோ2:12. நிச்சயமாகவே நாம் சந்தோஷப்படுகிறோம்! உலகமோ நமக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது என்கிறது.

**விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களே நமது பெலன்**

அன்பு சகோதரரே, நம் பிதாவின் சித்தத்திலிருந்து நம்மை விலக்கி, எதுவும் எவ்விதத்திலும் நமக்கு தீங்கிழைக்காது. இது நம்மிடமிருந்து புறப்பட்டுச்செல்கிற எண்ணமாக இருக்கவேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். உருவகமாக, நம் தலைகளிலுள்ள ஒரு மயிராகிலும் உதிர்ந்துபோவதில்லை என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறோம். மேலும் அவரிடத்தில் தங்கள் நம்பிக்கையை வைத்திருந்து,“...தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” (ரோமர் 8: 28) என்ற உத்திரவாதத்தை கர்த்தரிடத்திலிருந்து நாம் பெற்றிருக்கிறோம் நமக்கு ஆசீர்வாதமாயிராத எதுவாயினும் அனுமதிக்கப்படுவதில்லை, நம் சோதனைகளையும் இன்னல்களையும் சரியாய் பகுத்துப்பார்த்து ஏற்றுக்கொள்ளும் பொழுது, அவை நமக்கு , “அதிக நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது” – 2கொரிந்4:17,18.

நாம் பின்னோக்கிப் பார்க்கும்போது, குறுகலான வழியில் நடந்த அனைவரும் துன்பம் அடைந்ததை நம்மால் பார்க்கமுடியும். தேவனிடத்தில் இணக்கமாயிருக்கிறவர்கள் எவராயிருந்தாலும், இந்த உலகத்தின் போக்குக்கு இணக்கமில்லாதிருப்பார்கள். ஆரம்பநாட்களில் இருந்த பாப்டிஸ்ட்டுகள், அதன்பிறகு வந்த மெத்தடிஸ்ட்டுகள், மற்றவர்களைக் காட்டிலும் அதிக வெளிச்சத்தைப் பெற்றிருந்தபடியால் துன்பத்தை அடைந்தார்கள். பிரிஸ்பிடேரியன்களும் ஒரு காலத்தில் மற்றவர்களைக் காட்டிலும் பெரிதான வெளிச்சம் அடைந்திருந்தபடியால் துன்புற்றனர்.

**இரவு கிட்டத்தட்ட முடிந்துவிட்டது**

இன்றைய நாளில் நாம் இதையே எதிர்பார்க்கவேண்டும். தங்களுடைய உறுதிப்பாடுகளில் தைரியமாயிருப்போர்க்கு துன்பம் வரும். அவரது புகழ்ச்சிகளை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காகவே அவரிடத்திலிருந்து அபிஷேகம் பெற்றிருக்கிறோம் என்று கர்த்தர் நமக்குக் கூறுகிறார்(1பேது2:9). நம் வெளிச்சத்தை எந்த அளவாவது மரக்காலின்கீழ் வைத்திருக்கிறோமா என்பதைக் காண, நம்மை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். எபிரேயர் 11ம் அதிகாரத்தில் பரி.பவுல் பழைய ஏற்பாட்டில் தகுதிபெற்றவர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் அடைந்த பாடுகளை விவரிக்கிறார். சிலர் கல்லால் எறியுண்டு மரித்தனர், சிலர் வெட்டப்பட்டனர், அவர்கள் பலதரப்பட்ட வழிகளில் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். நீதியினிமித்தமாக இந்த தேவ மனுஷர்கள் அதிகமாய் சகித்தனர். “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்”.

ஆனால் இரவுவேளை கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. விரைவில் கர்த்தர் எழும்புவார், அவர் தம் கரங்களை, அதாவது தம் வல்லமையை நீட்டுவார், அதனால் அவரது பிள்ளைகள் மீட்கப்படுவார்கள். மேசியாவின் மகிமை நிறைந்த ஆளுகை விரைவில் வரும். அப்பொழுது நீதியாய் நடப்போர் அனைவரும் சமாதானத்தைப் பெற்றிருப்பர். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, அன்பு நண்பர்களே, நம் பாடத்தின் ஆதார வசனங்கள் விலையேறப்பெற்றவை. இவை நம் வழியில் நமக்கு உதவிசெய்து, வழிகாட்டி, நம் இருதயங்களுக்கு தைரியமூட்டுகிறது. மேலும் நம் யாத்திரையின் இந்த முடிவு நாட்களில் நமக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் கொண்டுவருகிறது.

“நம் தேவன் அன்பானவர்; நம் குரலைக் கேட்க அவர் பிரியமாயிருக்கிறார்;

அவரது கிருபையின் மகிமையை நாம் கிறிஸ்துவுக்குள் பகிர்கிறோம்;

அவரது ஆறுதலின் கரங்கள் நம்மைச் சூழ்ந்திட அவர் விருப்பமாயுள்ளார்;

குழந்தைகளின் ஸ்தலத்தில் நம்மைத் தஞ்சமடையச்செய்கிறார்”

நம் ஜெபங்களுக்கு பதிலளிக்க பிரியமாயிக்கிறார்

நாம் சிறந்தது என்று நினைக்கும் வகையில், இல்லாமற்போனாலும்

அவர் எதிர்பார்க்கும் சாத்தியக்கூறுகளுடனும் சரியான தீர்ப்போடும்,

நமக்கு ஆசீர்வாதங்களைத் தந்து, மற்றவைகளை தக்கவைத்துள்ளார்”

--------